பக்கங்கள் 24

# புதுவிதி

PUTHU VITHI

விலை 20/=

புதுமை : 02 | 06 ஜனவரி 2018 | விதி : 82



யாழ். மாநகர சபை: மெல்லக்கிளம்பும் பூதங்கள்





வீழ்ச்சியில் இருந்து எழுமா இலங்கை?



எல்லைக்கோடு - சிறுகதை



நீந்திக்கடந்த நெருப்பாறு



# ஆக்கிரமிக்க துடிக்கும் பௌத்தம்

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# சினிமா

சூர்யாவுடன் நடிக்க வேண்டும் என்பது எனது பள்ளிக்கால கனவு. அது இப்போது நிறைவேறியிருக்கிறது எனக் கூறியிருக்கிறார் கீர்த்தி சுரேஷ்.சூர்யா - கீர்த்தி சுரேஷ் நடிப்பில் உருவான தானா சேர்ந்த கூட்டம் படம் குறித்துப் பேசிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

என்னுடைய அம்மா சூர்யாவின் தந்தை சிவகுமாருடன் 3 படங்களில் நடித்தவர். நான் பாடசாலையில் படிக்கும்போது சூர்யாவுடன் ஒருநாள் கதாநாயகியாக நடிப்பேன் எனக் கூறியிருந்தேன். அது இப்போது நிஜமாகிய்ுள்ளது - என்றார்.





ஜல்லிக்கட்டு போராட்டம், பிக்பாஸ் மூலம் பெரும்பாலானோரின் கவனிப்பைப் பெற்றவர் ஜூலி.

இப்போது அவர் பெயரிடப்படாத தமிழ்ப் படம் ஒன்றில் கதாநாயகியாக அறிமுகமாகிறார்.

ஜூலி தற்போது தனியார் தொலைக்காட்சி ஒன்றில் நிகழ்ச்சித் தொகுப்பாளராகப் பணியாற்றி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.









# ஆக்கிரமிக்க துடிக்கும் பௌத்தம்

மகிந்த தேரரின் ஆசி பெற்று பௌத்தத்தைத் தழுவிய தேவநம்பிய தீசன் பௌத்த நெறி தவறாது ஆட்சி செய்தான். ஆட்சி பரிபாலனத்தில் தொடர்ந்து கவனம் செலுத்திய அவன் மகிந்த தேரரின் பிரதான சீடரான ஞான தேரரைத் தேடி மத்தளகந்தவை அடைந்தான்.

படை பரிவாரங்களிடம் இருந்து விலகி மரவுரி தரித்துப் புறப்பட்டான். நெடுநாள் பயணம் உணவின்றி, மெலிந்தது தேகம், குருவின் ஆசியைப் பெற்று புத்தரின் அருளைப் பெற அவனின் பயணம் தொடர்ந்தது. மத்தளகந்த மலையை அண்மித்தான். குருவைக் காணப் போகிறோம் என்ற ஆர்வமிகுதியால் விரைய முற்பட்டான். சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாது - சரியான உணவின்றி - நீரின்றி தொடர்ந்து நடந்த களைப்பால் மயங்கி வீழ்ந்தான்.

மெல்லிய தென்றல் அவனுடலைத் தழுவியதில் உடல் சில்லிட்டது. அவன் தலையை ஒரு கை தடவியது. புத்தரின் ஆசிர்வாதம் போல் அவனுக்குத் தோன்றியது. சரியாக அவனால் கண்களைத் திறக்க முடியவில்லை. திறந்தவனின் கண்களுக்கு ஒளிபொருந்திய முகமே தெரிந்தது. அது வேறுயாருமல்ல, அவன் தேடி வந்தவரும் - மகிந்த தேரரின் பிரதான சீடர்களில் ஒருவருமான ஞான தேரரே. எழுந்து அவரைப் பணிந்தான். அவனை ஆசிர்வாதித்த தேரர் அவனை மத்தளகந்த விகாரைக்கு அழைத்துச் சென்றார்.

மத்தளகந்த பன்சலவின் மகா புத்தர் சிலையில் சாந்தம் தவழ்ந்தது. கண்களின் ஒளி அவனுள் புதிய சக்தியைக் கொடுத்தது. சில நாட்கள் தங்கியிருந்து, குருவிடம் போதனைகளைப் பெற்றான். அதன் பின்னர் தலைநகரை அடைந்து ஞானதேரரின் ஆசியுடன் பௌத்த தர்ம ஆட்சியை நிலைநாட்டினான்.

ஞான தேரரின் ஆசியை தேவநம்பிய தீசன் பெற்ற இடமே சம்பூர். மத்தள கந்த என்பதையே தமிழர்கள் ஆக்கிரமித்து மத்தள மலை எனப் பெயரிட்டது மட்டுமல்ல. 2000 வருட பழைமை வாய்ந்த விகாரையையும் அழித்து விட்டார்கள். இப்படி ஒரு கதை மகாவம்சத்தில் இடம்பெற்றிருந்தது. தலதா மாளிகையில் 500 வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட தீயில் அந்த ஓலைச் சுவடிகள் அழிந்து விட்டன. அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டில் இந்தத் தகவல்கள் உள்ளன. தொல்பொருள் திணைக்களம் இப்படி ஒரு கதையை சொல்லும். இலங்கைச் சட்டத்தின்படி நீதிமன்றங்களும் தீர்ப்பை வழங்கும்.

மத்தளமலை மத்தளகந்த என்றாகும், 2000 வருட பழைமை வாய்ந்த விகாரைக்கு கட்டடம் அமைக்கப்படும். உருக்குலையாத புத்தர் சிலை ஒன்று நிலத்திலிருந்து மேலெழும். இதுதான் தேவநம்பியதீசன் வழிபட்ட புத்தர் சிலை என்று தொல்பொருள் ஆய்வாளர்கள் கூறுவார்கள். புத்தரின் அருளைப் பார்த்தீர்களா? கனரக ஆயுதங்களைப் பயன்படுத்தியும் சிலைக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்பார்கள். விகாரை நிர்மாணிக்கப்பட்டதும் ஜனாதிபதி வந்து திறந்து வைப்பார், பிரதமர் செல்வங்களை வாரி வழங்கி வைப்பார். எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் வந்து வணங்கி பிக்குவின் ஆசி பெற்றுச் செல்வார்.

விகாரை பராமரிப்புக்கும் இன்னபிற தேவைகளுக்கும் குடி யேற்றங்கள் ஏற்படுத்தப்படும். தேவநம்பியதீசன் காலத்தில் இப்பகுதியில் வசித்துப் பின்னர் தமிழர்களால் விரட்டியடிக்கப்பட்ட மக்களின் வாரிசுகள் மாத்தறையில் நிலமின்றி வாழ்கிறார்கள் என்ற உண்மை தெரியவரும். ஐயாயிரம் குடும்பங்களின் காணிகளை தமிழர்கள் திருப்பக் கொடுக்க வேண்டும் எனக் கோரிக்கை எழும். காணியை இழந்து தலைமுறை தலைமுறையாக கஷ்டப்பட்ட சிங்கள பௌத்தர்கள். கண்ணீர் சிந்துவார்கள். இனியும் பொறுக்க முடியாது. தமிழர்களின் அடக்குமுறைக்குப் பதிலடி கொடுக்கப்படும்.

அதன் பின்னர் ஞான தேரரின் உடல் தகனம் நடந்த இடம் கண்டுபிடிக்கப்பட்டு அங்கு விகாரை எழும். தொடர்ந்து அவரின் சீடர் வழி வந்தவர்களின் பூதவுடல் தகனம் நடந்த இடங்களும் கண்டுபிடிக்கப்பட்டு அங்கும் விகாரைகள் எழும் அவற்றின் தேவைகளுக்காக ஐம்பதாயிரம் குடும்பங்கள் குடியேறி இருக்கும். சுதந்திரம் கண்ட சிங்களவர்கள் தம்மை அடக்கி ஆண்ட - தங்கள் நிலங்களை பறித்த தமிழர்களை மன்னித்து நல்லிணக்கம் பேசுவார்கள். அவர்கள் விரைவில் மோட்சம் அடைய குடும்பங்களை அப்படியே மோட்சத்துக்கு அனுப்புவார்கள். தமிழர்களின் இரத்தம் ஆறாகிப் புத்தரின் பாதங்களை நனைக்கும். இதன் மூலம் அச்சிலை மீண்டும் புனிதம் பெறும்.

சம்பூர் - சூடைக்குடா - மத்தளமலை முருகன் ஆலயத்தில் கடந்த முதலாம் திகதி பொங்கல் பொங்கியவர்களை ஆளுநர் ரோகித போகொல்லாகமவின் மனைவியும் பொலிஸாரும்

( 18 ஆம் பக்கம் பார்க்க)

# கடந்தவார சமூக வலைத்தளங்களில்



பெண்களிடம்
கேட்கக்கூடாதது
"வயது"

f/siringa.pls




ஆண்களிடம்
கேட்கக்கூடாதது
"சம்பளம்"



மாணவர்களிடம்
கேட்கக்கூடாதது
"மதிப்பெண்"

2017: மச்சி ஒருத்தன் மாட்டிருக்கான்... அவன போதுமான அளவுக்கு வச்சி செஞ்சிட்டேன்...நீ ப்ரீயா இருந்தா அவன டேக் கேர் பண்ணிக்கரியா:.




f/siringa.pls


2018: கவல படாத மச்சி
இன்னக்கி நைட்ல இருந்து
அவன நான் பாத்துக்குறேன்.

டேய் மகனே உங்க அம்மா வர வர யூஸ் பன்ற ஆயுதம் ல்லாம் ரொம்ப பயங்கரமா இருக்கு ஏதோ முதல்ல கரண்டி அப்புறம் மத்துக்கட்டை இப்போ செங்கல் எடுத்து அடிக்கிறா




யோவ் அப்பா நீ மறுபடியும் அடி வாங்க போற அது செங்கல் இல்லை உன் பொண்டாட்டி தீபாவளிக்கு செஞ்ச "மைசூர் பாக்"

கார் வாங்குவதற்கு பணக்காரனா இருக்கனும்னு அவசியம் இல்லை




குழந்தையா இருந்தாலே போதும்

நம்ம கோவத்த காட்ட இந்த குழந்தைங்கிட்ட கத்துனா...



அதுங்க என்னமோ நாம காமடி பண்ணுறோமோன்னு நினச்சி சிரிக்குதுங்க...நமக்கும் கோபம் போயிடுது!

வருசத்துக்கு மூனு செருப்பு மாத்தவேண்டியதா இருக்கு... இனி எப்படி செருப்பு தேயுதுன்னு பாத்துடலாம்..



f/alwzsmle

வெயிட் பண்ணு சிக்னல் விழுந்ததும் போவோம்...



f/alwzsmle

இல்லைன்னா கழுதைங்க ரூல்சை மதிக்கலைன்னு பேசுவானுங்க...

ஒரே நாய் எப்படி ரெண்டு முறை உங்களைக் கடிச்சுது..?



f/alwzsmle

பா.ஜெயக்குமார்

கடிச்ச நாயோட ஒரு செல்ஃபி எடுத்தேன். ரெண்டாவது முறை கடிச்சுடுச்சு..

80க்கு மேல
போகக்கூடாதுன்னா




160 வரை எதுக்கு மீட்டர்ல வச்சிக்காங்க!!!

எவ்வளவு படிச்சி என்ன
பிரயோஜனம்...



f/siringa.pls

என்ன தான் பெரிய போன் வச்சுருந்தாலும்.. கைநாட்டு வச்சா தான் அன்லாக் பண்ணமுடியும்...!



புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## “பாய்” சொல்வோம் பொலித்தீனுக்கு

ஒரு புறம் இலகுவாக இருக்கிறது என மகிழ்ச்சி அடைந்தாலும் காலைச் சுற்றிய சனியனாக இருக்கும் – ஷொப்பிங் பை – பொலித்தீனைத் தொலைத்து விட வேண்டும் என்பதே பெரும்பாலானவரின் விருப்பமாக இருந்தது.

5 ரூபாவுக்கு ஷொப்பிங் பை விற்பனையானபோது பாவனை ஓரளவு குறைவாகவே இருந்தது. ஆனால் ஷொப்பிங் பை உற்பத்தியாளர்களின் கோர்பிரேட் மூளையும் – மக்களைக் கவர விற்பனை நிறுவனங்கள் கையாண்ட இலகு தந்திரமும் 5 ரூபா பொருளுக்கும் ஷொப்பிங் ஙப இலவச இணைப்பாக ஒட்டிக் கொண்டது. இதனால் ஷொப்பிங் பை குப்பை மலையாகக் குவியத் தொடங்கியது.

எங்கு பார்த்தாலும் ஷொப்பிங் பை கழிவுகள் அதை அகற்றுவதும் – அழிப்பதும் கடினமாகிப் போன பின்னர்தான் மக்கள் – சமூக அமைப்புகள் விழித்துக் கொண்டன. ஆனாலும் ஷொப்பிங் பையின் பிடியிலிருந்து மீள்வது என்பது எவராலும் முடியாததாக இருந்தது. இதைத் தொடர்ந்து அதனைத் தடை செய்ய வேண்டும் என்ற கோரிக்கைகள் எழுந்தன. 2007 ஆம் ஆண்டே அரசாங்கம் 20 மைக்ரோனுக்கு குறைந்த பொலித்தீன் பைகளைத் தடை செய்வதாக வாக்குறுதி அளித்த போதும், அது நடக்கவில்லை. மாறாகப் பொலித்தீன் பாவனை அதிகரிப்புக்கும் உற்பத்திக்குமே அரசின் உச்ச பொறுப்புகளில் இருந்தவர்கள் வழி சமைத்தனர்.

பல்கிப் பெருகி அழிக்க முடியாது நிறைந்து வழிந்து இலங்கைத் தாயின் வயிறு வீங்கி பாதிப்பை உணர்ந்த பின்தான் தற்போதைய அரசாங்கம் பொலித்தீன் மீதான தடையை அமுல்படுத்த முன்வந்தது. ஆனாலும் அதற்கும் ஆயிரம் தடைகள். 2017 செப்ரெம்பர் முதலாம் திகதி பொலித்தீன் மீதான தடை நடைமுறைக்கு வந்தபோதும், அதற்கெதிராக நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் தற்போது 2018 இன் ஆரம்பத்தில் பொலித்தீன் தடையை மீறுவோருக்கு எதிராக நடவடிக்கைக்கு அரசாங்கம் தயாராகியுள்ளது. ஆனாலும் பெருநிறுவனங்கள் சில அதற்குக் கட்டுப்பட்டதாகத் தெரியவில்லை.

போகிற போக்கில் பொலித்தீனுக்கு ஆதரவாக போராட்டங்களை நடத்தி விடுவார்களோ என்பதாக சில “பெரு முதலாளி”களின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. பொலித்தீன் பயன்பாட்டுச் “சுகத்தில்” இருந்து மக்கள் மீட்டெடுக்கப்பட இயற்கையோடு ஒன்றித்து விடக்கூடிய கடதாசியில் தயாராகும் தரமான பொருள்களின் பயன்பாட்டை ஊக்குவிப்பது அத்தியாவசியம் மட்டுமல்ல திட்டமும் அவசியம். அரசாங்கம் அதனைச் செய்ய வேண்டும்.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'



- சம்புகுன்றன் -

## யாழ்:நகரத்துப் பேய்கள்

எங்கள் கிராமத்தின் அந்த வைரவர் ஆலயத்தில் வருடந்தோறும் வைகாசி மாதத்தில் ஒரு நாள் பொங்கல் வைத்து மடைபோடுவதுடன் கிடாய் வெட்டும் நடைபெற்றதுண்டு.

அன்றைய தினம் மாலை வேளையில் அந்த ஆலயத்தைப் பராமரித்து வருகின்ற குடும்பத்தின் உறுப்பினர் ஒருவர் “சாமி” (உரு) ஆடி அவரது வீட்டிலிருந்து நடை பவனியாக ஆலயத்துக்கு மடைப் பண்டம் எடுத்துச் செல்வர்.பின்னர் நள்ளிரவில் பொங்கல் ஆரம்பமாகி அதிகாலையில் கிடாய்கள் வெட்டப்படும்.

இந்தப் பொங்கலையும், கிடாய் வெட்டையும் பார்ப்பதற்கு சிறுவனாக இருந்த எனக்கு விருப்பம் இருந்தாலும், வீட்டில் அனுமதி கிடைப்பதில்லை. ஒவ்வொரு வருடமும் பொங்கல் தினத்தன்று வீட்டில் அனுமதி கேட்டால் சிறுவர்கள் அதை எல்லாம் பார்க்கக் கூடாது, என்ற பதிலே அம்மாவிமிருந்து வரும். அழுது அடம்பிடித்தாலும் வீட்டில் அனுமதி கிடைக்கவே கிடைக்காது. அம்மாவை விடவும் அம்மாவின் தகப்பனார் அதாவது எனது பேரன் அனுமதிக்க மாட்டார். பிறகென்ன அழுதுவிட்டுப் படுக்க வேண்டியதுதான்.

இப்படியே சில வருடங்கள் அனுமதி கிடைக்காத நிலையில் எதற்காகக் கிடாய்களை வெட்டுவதைச் சிறுவர்கள் பார்க்கக் கூடாது என்று ஒரு நாள் அம்மாவிடம் கேட்டேன். எனது வயதை ஒத்த சிறுவர்களும் மற்றும் எனது நண்பர்களும் அதைப் பார்க்கும்போது நான் மட்டும் ஏன் பார்க்கக்கூடாது என்றும் திரும்பவும் அவரிடம் கேட்டேன். அதற்கு எனது அம்மா கூறிய காரணம் எனக்கு வியப்பாக இருந்தது. ஆனால் அக்காரணம் உண்மையாக இருக்குமோ என்று எண்ணத் தோன்றியது.

எங்களுடைய சின்ன மாமிக்கு ஒரு மகன் இருந்தானாம். அவன் இளைஞனாக இருந்தபோது அங்குள்ள ஆலயமொன்றில் கிடாய் வெட்டைப் பார்த்துவிட்டு வந்து காலையில் படுத்தவராம். பின்னர் அடுத்த நாள் திடீரென அவர் இறந்துவிட்டாராம். கிடாய் வெட்டுவதைப் பார்த்ததால்தான் பேய் பிடித்து இறந்துவிட்டாராம். இதனால் தான் சின்னப் பிள்ளைகளைக் கிடாய் வெட்டைப் பார்க்க அனுமதிப்பதில்லை என்று அம்மா கூறி முடிக்க முன்னர், தனது சகோதரியின் மகன்தான் அவ்வாறு இறந்துவிட்டார் என்று எனது பேரனாரும் அதை உறுதிப்படுத்தினார். இதைக் கேட்டதும் எனக்கு எதுவுமே சொல்ல முடியவில்லை.


கிடாய் வெட்டுவதைப் பார்த்ததால் பேய் பிடித்ததா? அது உண்மையாக இருந்தாலும், அப்படியாயின் அந்தப் பேய் எல்லாரையும் அல்லவா பிடிக்க வேண்டும் - என்று நினைத்தபோது, இதை எனது நண்பர்களுக்குச் சொல்லலாம் என்றால் சொல்ல வெட்கமா இருந்தது. அதனால் எவருக்கும் சொல்லவில்லை. பின்னர் அடுத்தடுத்த வருடங்களில் வீட்டாரின் அனுமதி கிடைத்துக் கிடாய் வெட்டுவதைப் பார்த்துவிட்ட போதும், மறு நாள் முழுவதுவும் என்னையும் பேய் பிடிக்குமோ? என்ற பயம் பிடித்துக் கொண்டது. அவ்வாறே அந்த நாளும் கழிந்தது. இப்போ பல வருடங்கள் உருண்டோடிவிட்டன.

எதற்காக இந்தப் பேய் கதை என்று எண்ணக் கூடும். நான் கூறியது கிராமத்துப் பேய் பற்றியது. ஆனால் இப்போ நகரத்திலும் பேய்கள் உலாவுவதாகப் பேய்க்கதைகள் அடிபடுகின்றதைக் கேள்விப்பட்டதும் எனக்கப் பழைய ஞாபகம் வந்துவிட்டது. யாழ. நகரில் உலாவிவரும் பேய்பிடித்து இதுவரை ஒன்பது பேர்வரை இறந்துவிட்டார்கள் என்று சிற்றங்காடி வியாபாரிகள் தெரிவித்திருக்கின்றனர்கள். இறந்தவர்கள் வேறு யாருமல்ல. சிற்றங்காடி வியாபாரத்தில் ஈடுபட்டுவந்த வியாபாரிகள் நான்குபேர் மற்றும் அங்குள்ள வியாபாரிகள் சிலரது நெருங்கிய உறவினர்கள் என்று மொத்தம் ஒன்பது பேர், கடந்த மூன்றுமாத காலப்பகுதியில் இறந்துள்ளதாக அந்த வியாபாரத் தொகுதி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

குறித்த சிற்றங்காடி அமைந்துள்ள இடம் 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு சுடுகாடாக இருந்ததாகவும் ஆனால் அங்காடி அமைப்பதற்கு முன்னரோ அல்லது அந்த அங்காடியைத் திறந்து வைத்தபோதோ அந்தக் கடைத்தொகுதிக்கு பூசை பரிகாரங்கள் அதாவது சாந்தி பூசை

( 18 ஆம் பக்கம் பார்க்க)

# வேரை விட்டு கிளையை வெட்டும் ஜனாதிபதியின் வாள்




**இது குருஷேத்திரப் போர்க்களம்.**

ஒருபுறம் பாண்டவர் சேனை . எதிர்த்தரப்பில் கௌரவ சேனை. போர் சங்கு முழங்கியதும், சேனைகள் ஒன்றுடன் ஒன்று மோதும். வில்லம்புகள் பாயும். கதாயுதங்கள் மோதும். வாள்கள் வெட்டி விழுத்தும். எங்கும் இரத்த ஆறு ஓடும். உயிர்கள் தொகை தொகையாகப் பலி கொள்ளப்படும்.

அருச்சுணன் பாண்டவர் அணியில் தேரேறி வந்துவிட்டான். எதிர்த்தரப்பை நோக்குகிறான். துரோணர்,பீஷ்மர் என் வித்தைகளைக் கற்றுக் கொடுத்த ஆச்சாரியர்கள். துரியோதனன், துச்சாதனன் எனச் சகோதரர்கள். போரில் அவர்கள் கொல்லப்படுவர். அல்லது பாண்டவர் கொல்லப்படுவர். ஆசான்களையும் உறவுகளையும் கொல்வது? விஜயனின் மனம் சோர்கின்றது. காண்டீபம் எழ மறுக்கின்றது. தேரோட்டியாய் வந்த கண்ணன் சிரிக்கின்றான்.

பகவத் கீதை பிறக்கின்றது. தர்மத்தை நிலைநாட்ட தடையாய் நிற்பவர்கள் அழிக்கப்பட வேண்டும். அங்கு உறவு முறைகளுக்கோ, பந்த பாசங்களுக்கோ இடமில்லை. பாவ புண்ணியம் பொருட்படுத்தப்படு வதில்லை. கீதையின் ஓங்காரத்தில் விஜயனின் வில் மேலெழுகின்றது. அம்புகள் பொழியப்படுகின்றன.

அண்மையில் மைத்திரிபால சிறிசேன பகவத்கீதையைக் கையிலெடுத்து விட்டார். வாளை ஓங்கி விட்டார். இலஞ்சம், ஊழல், மோசடி இல்லாத தூய ஆட்சியை உள்வாங்க, வாளை வீசப்போகிறாராம். அந்த வாள்வீச்சில், இனம், மதம், நிறம், கட்சி என்ற பேதங்களின்றி மோசடிப் பேர்வழிகளை வெட்டி வீழ்த்தப் போகின்றாராம். அப் பணி வெற்றி பெறவேண்டும் என்பதுதான் அனைவரினதும் விருப்பம்.

மக்களின் பணம் சூறையாடப் படுவதால், நாடே குட்டிச் சுவராகின்றது என்பது உண்மை. ஆனால் அவரால் முடியுமா என்பதுதான் கேள்வி. ஏனெனில் அவரால் வெட்ட முடிவது கிளைகளைத்தான். மூல வேரையல்ல. எனவே வெட்ட வெட்ட வெவ்வேறு மரங்கள் முளைத்துக் கொண்டேயிருக்கும்.

**அப்படியானால் எதுதான் மூலவேர்?**

அது குறுக்கு வழியில் பணம் திரட்டும் மனப்பான்மை.! உண்மையான , நேர்மையான உழைப்பின்றியே கொள்ளை இலாபம் தேடும் வெறி! இலஞ்சம், ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம், போதைவஸ்து வர்த்தகம் அனைத்துக்கும் மூலவேர் குறுக்கு வழியில் செல்வம் தேடும் பேராசைதான். அந்த முறையற்ற ஆசையை மனித மனங்களிலிருந்து விரட்டாத வரை, அது உருவாகுவதற்கான வாய்ப்புகள், முற்று முழுதாக அழிக்கப்படும் வரை, எந்த ஒரு முறைகேட்டையும் தடுத்துவிட முடியாது. வெட்ட வெட்டத் தழைக்கும் எட்டுத் தலை நாகமாக சீறியெழுந்து கொண்டேயிருக்கும். வாளேந்திய ஜனாதிபதியின் அரசாங்கமே இந்தக் குறக்கு வழியில் பணம்பெறும் ஆசையை ஊட்டி வளர்க்கின்றது. அரசின் அனுசரணையிலேயே சட்டபூர்வமான, உண்மையான உழைப்பின்றி பணம்பெற நாளும் பொழுதும் அழைப்பு விடுக்கப்படுகின்றது. 10 ரூபாவுக்கோ அல்லது 20 ரூபாவுக்கோ ஒரு ரிக்கற் பெற்றால் லட்சங்கள் பெறலாம். சில சமயம் சுப்பர் பரிசாகக் கோடிகளும் பெறலாம்..

**அப்பட்டமான சூதாட்டம்.**

பலரின் பத்தோ, இருபதோ , ஐம்பதோ ரூபாக்கள் சிலரிடம் இலட்சங்களாகவம், கோடிகளாகவும் குறுக்கு வழியில் மாறிவிடும் மந்திரவித்தை! இலட்சங்களையும், கோடிகளையும், குறுக்கு வழியில் அடையும் ஆசை ஏராளமானவர்களை இலவுகாத்த கிளிகளாக்குகின்றன. எனினும் மின்னி மின்னி மறையும் 'மெகா' பரிசுப் பொருட்கள் மக்களை மீண்டும் மீண்டும் ஏமாற வைக்கின்றன. பேராசையும், வேரிலிருந்து வெளிக்கிளம்பி கிளை பரப்பி, இலைவிட்டு வளர்கின்றது.

இது மட்டுமா? தொலைபேசி அழைப்பிலும் பரிசுகள். நூறு நூறாகப் போட்டால் இலட்சம் இலட்சமாகப் பரிசுகள். வங்கிகள் கூட இந்த ஆசையை ஊட்டி தங்கள் நலன்களைப் பெருக்குவதில் சளைத்து விடவில்லை. பெருந்தொகையான பணத்தை வைப்பில் இடுபவர்களின் பெயர்கள் குலுக்கிப் போடப்பட்டு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கு, ஆடம்பர வாகனங்கள் வழங்கப்படுவதும் உண்டு. இதுபோன்ற நிலையான வைப்புகளுக்கு குடை முதல் ரைஸ் குக்கர் வரை பரிசுகளும் உண்டு. இவ்வாறே வெவ்வேறு வர்த்தக நிறுவனங்கள் தமது வியாபாரத்தைப் பெருக்க பல்வேறு பரிசுகளையும், அன்பளிப்புகளையும் வழங்குவதுண்டு.

தேசிய லொத்தர் சபையென்றாலென்ன, வங்கிகளென்றாலென்ன இந்தக் குறுக்கு வழியில் சம்பாதிக்கும் ஆசையை மூட்டி இதன்மூலம் மக்கள் பணத்தைக் கொள்ளையடித்து இலாபம் பெறுகிறார்கள் என்பதை எமது மக்கள் தெரிந்து கொண்டே ஏமாந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் இவையெல்லாம் சட்டபூர்வமாகவே இடம்பெறுகின்றன. இவற்றை ஜனாதிபதியின் வாளால் எதுவுமே செய்துவிட முடியாது. இவற்றில் இன்னொரு பெருங்கொள்ளை தரகுக்கூலி. அரசாங்கங்களுடன் இடம்பெறும் வர்த்தகங்களிலேயே தாரளமாக தரகுப் பணம் கைமாறுகின்றது.

ஆயுதக் கொள்வனவு, கைத்தொழில் உபகரணங்கள் கொள்வனவு, என்பவற்றிலேயே தரகுப்பணம் பெருந்தொகையாகப் பரிமாறப் படுகின்றது. பல்தேசிய அளவில் தரகு நிறுவனங்கள் சட்டபூர்வமாக இயங்கி வருகின்றன. வர்த்தக நடவடிக்கைகளின்போது, அவர்களுக்கு சட்டபூர்வமாக தரகுப் பணம் வழங்கப்படுகின்றது. அந்த நிறுவனங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சுகளுக்கோ அதிகாரிகளுக்கோ பல்வேறு வழிகளில் பங்கு கொடுப்பார்கள்.

நுரைச்சோலை அனல்மின்நிலையம் அமைக்கப்படுவதற்கு 50 வீத தரகுப் பணம் கைமாறியதாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா விஜயகுமாரதுங்க குற்றம்சாட்டியதை மறந்துவிட முடியாது. இந்த மின்நிலையம் இதுவரையில் நூற்றுக்கு மேற்பட்ட தடவைகள் பழுதடைந்து , மின்சாரத் தட்டுப்பாடு ஏற்படும் நிலை தோன்றியது. இப்படியாக மேலிருந்து கீழ்வரை, நியாயமற்ற முறையில் பிறர்பணத்தை கொள்ளையிடும் கொள்ளையிடும் உரிமை சட்டப்படி உண்டு. 'சூது' என்பது தடைசெய்யப்பட்ட குற்றம். ஆனால் லொத்தர் அரசாங்க அங்கீகாரம் பெற்ற கொள்ளை.

வீதிகளில் இலஞ்சம் வாங்கும் பொலிசாரையும், பணம் வாங்கும் பாடசாலை அதிபர்களையும், வங்கிகளில் கடன்பெற்றுக் கட்டாத நாடாளமன்ற உறுப்பினர்களைக் கைது செய்வதாலும் மட்டும் தூய்மையான நாட்டைக் கட்டியெழுப்ப முடியுமா? குறுக்கு வழியில் பணம் சம்பாதிக்கும் மனநிலையும், இம் மனநிலையை உருவாக்கும் சட்டபூர்வமான நடவடிக்கைகளுமே இலஞ்சம், ஊழல், மோசடி, அதிகார துஷ்பிரயோகம், என்பவற்றின் மூலவேராகும். அதைக் கெள்ளியெடுத்துஅகற்றாமல், கிளைகளை வெட்டி எந்தவித பயனுமில்லை. அவை மீண்டும் மீண்டும் முளைக்கும்.

# வீழ்ச்சியிலிருந்து எழுமா இலங்கை?

- ஏ.ஜே.ஞானேந்திரன் -

இலங்கை கிரிக்கெட் அணியினர் அடியோடு மறக்க வேண்டிய ஆண்டாக 2017 அமைந்து விட்டது ரசிகர் பட்டாளத்துக்கு விழுந்தது பலத்த அடிதான்! இனி ஒருபோதும் வரக்கூடாது என்று சொல்லும் வகையில், அடி மேல் அடிவிழுந்த ஆண்டாக, 2017 இலங்கை அணிக்கு உருவாகியதில், உலக தரத்தில் இதன் விளையாட்டு அகல பாதாளத்துக்குத் தள்ளப்பட்டு விட்டது.

விளையாடிய மொத்த 13 டெஸ்ட் போட்டிகளில், 7 போட்டிகளில் தோல்வி. 4 வெற்றிகள். விளையாடிய மொத்த 28 ஒரு நாள் போட்டிகளில் 23 தோல்விகள். 5 வெற்றிகள். 15, 20 ஓவர் மோதல்களில் 10இல் தோல்வி.5 இல் வெற்றி.

என்பதே நிஜம்.

÷ சிம்பாவேக்கு எதிரான தொடரில் வாங்கிக் கட்டியதன் எதிரொலியாக, அணித் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் , தன் பதவியை இடைநடுவில் ராஜிநாமா செய்து கொண்டார்.

÷ மட்டுப்படுத்தப்பட்ட அணித் தலைவர் உப்புல் தரங்க, பதவி நீக்கம் செய்யப்பட்டார்.

÷ பல தரப்பிலிருந்தும் எழுந்த அழுத்தம் காரணமாக , சனத் ஜயசூரியா, அணித் தெரிவுக் குழுவிலிருந்து ராஜிநாமா செய்து கொண்டார்.

÷ இலங்கை கிரிக்கெட் கட்டுப் பாட்டுச் சபைத் துணைத் தலைவர் ஜயந்த தர்மதாச தன் பதவியிலிருந்து ராஜிநாமா





நிலைநிறுத்த வழிவகுத்துள்ளது" என்று சபை ஓர் அறிக்கையைக் கொடுத்தது. இலங்கை 3 டெஸ்ட் போட்டிகளை இன்னிங்ஸால் தோற்றதுடன், இன்னொன்றை 304 ஓட்டங்களால் தோற்றது, கடந்த 7 மாதங்களில் சம்பவித்த நிஜம்.

"அணி களத்தில் இறங்கி பிரம்மாத மாக செயற்படுதை எவருமே பெரிதாகப் பாராட்டுவதில்லை" என்றொரு அறிக்கை வெளியிடப் பட்டது. ஆனால் கடந்த வருட மோதல்களில், 85 "பிடிகளை" கைநழுவ விட்டிருப்பதுதான் உண்மைக் கதை.

இலங்கை அணியைப் பற்றிய குறைகளே ஏராளம் என்றாலும், சென்ற ஆண்டில் சில பாராட்டுக்குரிய விடயங்களும் நடந்தேயிருக்கின்றன.

நொண்டிச்சாட்டை இங்கே முன்வைக்க முடியாது. கடந்த ஆண்டின் மிகச்சிறந்த துடுப்பாட்ட வீரராகக் கணிக்கப்படும் டிமுத் கருணரட்ணவின் அசத்தலான துடுப்பாட்டம் இந்தச் சிறப்பான வெற்றிக்கு களம் அமைத்துக் கொடுத்தது என்றால் மிகையாகாது. இந்தத் தொடரில் இவர் மொத்தம் 306 ஓட்டங்களை , சராசரி 76.5 என்ற கணக்கில் ஆடிக் குவித்திருந்தார்.

இது உச்ச நிகழ்வு என்றால், இலங்கை அணியை தொப்பெனக் கீழே விழுத்திய நிகழ்வுகள் பற்பல. சிம்பாவே அணியிடம் நன்றாகவே வாங்கிக் கட்டிக் கொண்டது, விசிறிகளைப் பெரிதாகவே காயப்படுத்தி இருக்கின்றது. இலங்கை அணி இத் தொடரில் விளையாடிய விதம், அணித் தெரிவு எந்த அளவுக்கு மோசமானது என்பதை அப்பட்டமாகவே வெளிப்படுத்தியது. அணித் தலைவர் மத்தியூஸ் தொடரின் இடைநடுவே தன் பதவியை ராஜிநாமா

இது 2017ஆம் ஆண்டுக்கான இலங்கை அணிக்கான புள்ளிவிபரங்கள். இனி வரவே கூடாது என்ற எண்ண வைக்கும் புள்ளி விபரங்கள்.

சொந்த மண்ணில் பங்களாதேஷ் அணியிடம் தோற்றது, உலக தரத்தில் 11 வது இடத்திலிருக்கும் சிம்பாவே அணியிடம் ஒரு நாள் ஆட்டத் தொடரை இழந்தது, கடந்த ஆண்டில் இரு தடவைகள் இரு ஒரு நாள் ஆட்டத் தொடர்களில் வெள்ளையடிப்புக்கு உட்பட்டது, அதேபோல இரு தடவைகள் 3-0 என்ற கணக்கில் இரு டெஸ்ட் தொடர்களில் வெள்ளையடிக்கப் பட்டமை- இலங்கைக் கிரிக்கெட் சரித்திரத்தில் பெருங்கறைகளை ஏற்படுத்தியிருக்கும் நிகழ்வுகள் இவை

1990களின் ஆரம்பத்தில்தான் இலங்கை அணி இந்த அளவு மோசமான நிலையை எட்டியிருந்தது. அத் தருணத்தில் இலங்கை அணிக்காக விளையாடியவர்கள் பாதியளவு தொழில்ரீதியான அனுபவத்தையே கொண்டிருந்தார்கள்.

கடந்த வருடம் இலங்கை கிரிக்கெட் உலகில், தம் பதவியிலிருந்து விலகிய, விலக்கப்பட்ட பெரும் புள்ளிகளின் பட்டியலைப் பார்ப்போமா?

÷ அணி முகாமையாளர், சரித் சேனநாயக்க பதவி இறக்கப்பட்டார்.

÷ முதன்மைப் பயிற்சியாளர் கிரஹாம் போர்ட், உத்தியோக பூர்வமாக விலகிக் கொண்டார் என்ற சொல்லப்பட்டாலும், இவர் தூக்கியெறியப்பட்டார்

இன்றும் தம் பதவிகளைத் தக்க வைத்துக் கொண்டிருப்பது, இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் திலங்க சுமதிபாலவும் அவர் விசுவாசிகளுந்தான்.!

சுமதிபாலாவும் அவர் பரிவாரங்க ளும் இணைந்து நடத்திக் கொண்டிருக்கும் இந்தக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை, சீராகச் செயற்பட முடியாத ஒரு அமைப்பாக உருமாறி விட்டது. இவர்கள் விடும் அறிக்கைகள், நடந்த நிகழ்வுகளுக்கு சம்பந்தம் இல்லாமல் கோமாளித்தனமாக இருக்கின்றது.

**இதோ சில உதாரணங்கள்**

"20 ஓவர்கள் தொடரில் திஸ்ஸர பெரரா , ஓர் அணித் தலைவராக தன் கடமைகளை மிகச் சிறப்பாகச் செய்திருந்தார் என்று நாம் உணர்ந்தோம்".- இது வெளியிடப் பட்ட அறிக்கை. -(0.3) என்ற கணக்கில் இலங்கை அணி வாரிச் சுருட்டப்பட்டதே நிஜம்.

"ஐக்கிய அரபுக் குடியரசில் இடம் பெற்ற மோதல்களில், பாகிஸ்தானுக்கு எதிரான சரித்திர முக்கியத்துவம் பெற்ற வெற்றியும், இந்தியாவுக்கு எதிரான 3 மோதல்களில், இரு டெஸ்ட் போட்டிகளை வெற்றி தோல்வியின்றி முடித்ததும் , எந்தச் சந்தேகத்திற்கும் இடமின்றி, இலங்கை அணியை உலகிலேயே சிறந்த தொரு அணியாக தன்னை

இதில் உச்ச விடயம் பாகிஸ்தான் அணியை 2-0 என்ற கணக்கில் வென்றதுதான். 2009இலிருந்து. தனக்கு பரிச்சயப்பட்ட ஐக்கிய அரபுக்



குடியரசு மண்ணில், எந்த வெளிநாட்டு அணியாலும், பாகிஸ்தான் அணியை இங்கு தோற்கடிக்க முடியவில்லை. பாகிஸ்தான் அணி சார்பாக அதிசிறந்த இரு ஆட்டக்காரர்களான மிஸ்பா உல்ஹாக், யூனிஸ் கான் ஆகிய இருவரும் விளையாடவில்லை என்ற

செய்தமையிலிருந்து நிகழ்வின் கோரம் நன்றாகவே புலப்பட்டது. .

2017இல் இலங்கை கிரிக்கெட் சபையின் பெரிய சாதனை என்ற முறையில், சந்திகா ஹத்துருசிங்கவை மீண்டும் தலைமை அணிப் பயிற்சியாளராகக் கொண்டுவந்து

( 18 ஆம் பக்கம் பார்க்க)

# ஈழத்துக் கிராமங்களும் மண் வாசனையும்

(தொடர் 18)

- வல்வை ரவி -

# கொக்குவில்

ஈழத்தின் முக்கிய கிராமங்களின் வரிசையில் கொக்குவில், தாவடியும் உள்ளன. யாழ். மாவட்டத்தின் வலிகாமத்தில் உள்ள ஊர்களே கொக்குவில், தாவடி. யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியில் யாழ். நகரில் இருந்து கிட்டத்தட்ட 3 மைல் தொலைவில் அமைந்துள்ளது.

இவ்வூர்களுக்குத் தெற்கு எல்லையில் யாழ்ப்பாணம் நகரம், வடக்கில் கோண்டாவில், கிழக்குத் திசையில் திருநெல்வேலி ஆகிய இடங்கள் உள்ளன.

சிறந்த கல்விமான்களைக் கொண்ட இவ்வூர்கள் தமிழுக்கும் சைவத்துக்கும் புகழ்பெற்ற மண் வாசனைமிக்க தேசங்களாகும்.

காங்கேசன்துறை வீதி கொக்குவிலை கிழக்கு, மேற்கு என இரண்டு பகுதிகளாகப் பிரிக்கின்றது. திருநெல்வேலிச் சந்தியில் இருந்து மேற்கு நோக்கி வரும் ஆடியபாதம் வீதி காங்கேசன்துறை வீதியைச் சந்திக்கும் இடமான கொக்குவில் சந்தி கொக்குவிலின் மைய இடமாகும்.

கொக்குவில் - கொக்குவில். கொக்கு என்பது பறவை, மாமரம், குதிரை, செந்நாய், மூல நட்சத்திரம் எனப் பொருள் சுட்டும் சொல்லாகும். கொக்குவிலின் வடக்கே நந்தாவில் என்ற பெரும் குளம் அமைந்துள்ளது. இக்குளத்தில் நிறைந்து காணப்பட்ட கொக்குகள் இவ்வூர் சோலைகளிலும் தங்கியமையால் கொக்குவில் எனப் பெயர் பெற்றது எனக் கொள்ளுதல் பொருத்தமெனலாம்.


கொக்குவிலின் அயல் பகுதியில் ஆனைக் கோட்டை அமைந்துள்ளது. கொக்கு-குதிரை. அவ்வகையில் கொக்குவில் பதியுடன் குதிரையைத் தொடர்புபடுத்தலாமோ என்பதும் ஆய்வுக்குரியது.



மஞ்சவனப்பதி முருகன் ஆலயம்



நந்தாவில் மனோன்மணி அம்மன் ஆலயம்




இந்த நந்தாவில் குளத்தின் அருகே குதிரைப் படை தங்கியிருக்கலாம். இது தொடர்பாக ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை குறிப்பிடும்போது,

"யாழ்ப்பாணக் குடியேற்றம் ஏற்பட்டபோது நல்லூரை அடைந்த இராசகுமாரன் யானைப்பந்தி, குதிரைப் பந்திகளும், யானை, குதிரை ஏற்றச் சவாரி வீதிகளும் செய்வித்து நல்லூரைச் சிறந்த அரசாக்கினான்" என அமைகிறது.

மேலும், கொக்கு என்றால் கருப்பு இதனால் கொக்குவில் கருப்பு வில் என்பது பொருள் சுட்டும். இரண்டாவது பொருள் வில் என்பது சங்ககாலத்தில் குளம் என்பதாகும். கொக்குவில் கொக்குகள் நிறைந்த குளமுடைய ஊர் என்றும் பொருள்படும்.

கொக்குவிலில் இந்துப் பண்பாட்டுப் பாரம்பரியமிக்க மக்களே அதிகம் வாழ்ந்து வருகின்றனர். இதற்கேற்றாற்போல் அதிகமான இந்து ஆலயங்களும் இங்கு காணப்படுகின்றன.

கல்வித் துறையிலும் கொக்குவில் புகழ்பெற்ற பகுதியாகும். கொக்குவில் இந்துக் கல்லூரி இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. இது 1910 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இது ஒரு கலவன் பாடசாலையாகும். இதனை செல்லையா என்பவரே நிறுவினார் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வாறாக தாவடி, கொக்குவில் கிராமங்கள் தமிழர் பண்பாட்டு மண்வாசனை கமழுகின்ற தேசங்களாக விளங்கி வருகின்றமை யாவரும் அறிந்ததே.

# வாரப்பலன்

### மேடம்
அநியாயத்தைக் கண்டு மனம் கலக்கமடையும்.. தெய்வ நம்பிக்கையுடன் செயற்படுவதால் பணி சீராக நிறைவேறும். தொழிலில் திறன் அதிகரிக்கும். பணவிஷயத்தில் அவதானம் அவசியம்.

### துலாம்
ஆதாயம் அதிகரிக்கும் வாரம். விருந்து உபசாரத்தில் கலந்து கொள்வீர்கள். உயர்ந்த குறிக்கோளுடன் செயல்படுவீர்கள். எதிர்பார்த்த உதவி வந்து சேரும். வியாபார விற்பனையில் முன்னேற்றம் பெறும்.

### ரிஷபம்
இனிய பேச்சால் நல்லவர் மனதில் இடம் பிடித்துக் கொள்வீர்கள். தொழிலில் பலன் அதிகரிக்கும். தாராளமாகப் பணவரவு கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி வளரும்.

### விருச்சிகம்
வெளிப்படையாகப் பேசுவீர்கள். வியாபாரத்தில் அளவாக முதலிடுவது நலம். மூலதனம் போதும். அதிக உழைப்பால் மட்டுமே பணவரவு சீராகும். திடீர் செலவு ஏற்படலாம். வியாபாரம் செழித்து வளரும்.

### மிதுனம்
அதிக கடன் பெற வேண்டாம். வெளியூர் பயணம் மேற்கொள்வது நல்லது. உங்களின் மனம் திறந்த பேச்சு பிறரைச் சங்கடப் படுத்தலாம். தொழில், வியாபாரத்தில் போட்டி அதிகரிக்கும்.

### தனுசு
சிலரது பேச்சு உங்களுக்குச் சங்கடத்தை உருவாக்கும். சொந்தப் பணியில் கவனம் கொள்வீர்கள். வியாபாரத்தில் அளவான லாபம் கிடைக்கும். நிலுவைப் பணம் முயற்சியால் கிடைக்கும். ஒவ்வாத உணவு வகை உண்ண வேண்டாம்.

### கடகம்
மனதில் நல்ல சிந்தனை அதிகரிக்கும். குடும்பத்தினருக்கு இயன்ற அளவில் உதவுவீர்கள். வியாபாரத்தில் விற்பனை மேலோங்கும். குடும்பத்தில் மங்கல நிகழ்வு நடைபெறும்.

### மகரம்
தயக்கம் விலகி தைரியம் அதிகரிக்கும்.. அன்றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில் வளர்ச்சியால் வருமானம் உயரும். புத்திரர் விரும்பியபடி பொருள் வாங்குவீர்கள்.

### சிம்மம்
அதிகம் பேசுவதைத் தவிர்க்கவும். வியாபாரத்தில் பணச்சுமை அதிகரிக்கும். பிள்ளைகளை வழிநடத்துவதில் புதிய அணுகுமுறை தேவை. வாகனப் பயணத்தில் அதிக வேகத்தைத் தவிர்க்கவும்.

### கும்பம்
உங்களின் நற்செயலைச் சிலர் விமர்சிக்கலாம். தொழில் செழித்து வளரும். வீட்டில் தேவைக் கேற்ப மாற்றம் செய்வீர்கள். லாபம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளுக்கு பேச்சு வார்த்தை மூலம் நல்ல தீர்வு கிடைக்கும்.

### கன்னி
தடைப்பட்ட பணிகள் ஒவ்வொன்றாக நிறைவேறும். தொழில் வளர்ச்சியில் புதிய பரிமாணம் ஏற்படும். மேலதிகப் பணவரவு கிடைக்கும். நண்பர் கேட்ட உதவியை செய்வீர்கள். மனச்சாட்சியோடு நடப்பீர்கள்.

### மீனம்
அறிமுகமில்லாதவரிடம் நெருங்கிப் பழக வேண்டாம். தொழில் நடைமுறை சராசரியாக இருக்கும். செலவில் சிக்கனம் அவசியம். வீடு வாகன பாதுகாப்பில் கூடுதல் கவனம் தேவை. வியாபாரம் செழித்து வளரும்.



காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் மக்கள் 316 நாளாகத் தமது போராட்டத்தைத் தொடருகின்றனர்.



மட்டக்களப்புப் போரதீவுப்பற்றுப் பழுகாமத்தில் குப்பை கொட்டுவதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் ஆர்பாட்டம்.



க.பொ.த சாதாரணப் பரீட்சைக்கு தோற்றிச் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவித்த நிகழ்வு வவுனியா மாவட்டம் புதுக்குளம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது.



இம்மாதம் நியூசிலாந்தில் நடைபெறவிருக்கும் 19வயதுக்குட்பட்ட உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றவிருக்கும் கனடா அணியில் உள்ள 3 ஈழத்தமிழர்கள்.



தமிழர் கலாசாரத்தால் கவரப்பட்ட ஜப்பானைச் சேர்ந்த காதல் ஜோடி ஒன்று இந்துத் தமிழ் கலாசார முறைப்படி மதுரையில் திருமணஞ் செய்து கொண்டது

# உப்பு வியாபாரியும் கழுதையும்



முன்னொரு காலத்தில் ஒரு உப்பு வியாபாரி இருந்தான். அவன் தினந்தோறும் ஒரு கழுதையின் மீது உப்பு மூட்டைகளை ஏற்றி ஊருக்குள் போய் வியாபாரம் செய்து வருவான். போகும் வழியில் ஒரு ஆறு இருந்தது. அந்த ஆற்றைக் கடந்துதான் ஊருக்குள் போக வேண்டும்.ஒரு நாள் உப்பு வியாபாரி வழக்கம் போல கழுதையின் முதுகில் உப்பு மூட்டைகளை ஏற்றிக் கொண்டு வியாபாரத்திற்கு கிளம்பிச் சென்றான். வழியில் உள்ள ஆற்றை, கழுதை கடந்த போது எதிர்பாராமல் கழுதையின் கால்கள் வழுக்கிவிட்டன. எனவே, கழுதை தடுமாறி ஆற்றுக்குள் விழுந்து விட்ட்து.

கழுதை தவறி விழுந்ததால் அதன் முதுகில் இருந்த உப்பு மூட்டை நனைந்து விட்டது. கழுதையை வியாபாரி மெல்ல தூக்கிவிட்டான். ஆனால், நீரில் மூழ்கியதால் உப்பு மூட்டை நனைந்தது அல்லவா? அது ஒரு சில நிமிடத்தில் அப்படியே, தண்ணீரில் கரைந்து பாதி மூட்டையாகிவிட்டது.எனவே, கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை வெறும் சாக்குப் போல எடையில்லாதபடி ஆகிவிட்டது. ஆஹா என்ன ஆச்சரியம் இப்போது கழுதை முதுகில் சுமையே தெரியவில்லை.கழுதைக்கு மிகுந்த சந்தோஷம். ஆனால் வியாபாரிக்கு பெரிய நஷ்டம். உப்பு வியாபாரியும் உப்பு வியாபாரம் செய்ய வழியில்லாமல் கழுதையை ஓட்டிக் கொண்டு வீட்டிற்கு திரும்பினான். மறுநாளும் வழக்கம் போல வியாபாரி உப்பு வியாபாரத்திற்கு கிளம்பினான். கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை கழுதைக்கு கனமாக இருந்தது. கழுதை மெல்ல நடந்து ஆற்றுப் பாலம் அருகே வந்தது. திடீரென அதற்கு முந்தைய நாள் நினைவு வந்தது. எனவே, மெல்ல தடுமாறுவது போல செய்து சட்டென்று ஆற்றுக்குள் விழுந்தது. அடுத்த நிமிடம் கழுதை முதுகில் இருந்த உப்பு மூட்டை நீரில் கரைந்து விட்டது. இன்றும் கழுதைக்கு முதுகில் சுமை இல்லாது போய்விட்டது.கழுதை தனது தந்திரத்தால் தொடர்ந்து இதையே செய்த வந்தது. இதனால் தினமும் வியாபாரத்திற்குப் போக முடியாமல் வியாபாரி தொடர்ந்து சிரமம் கொண்டான். அவனுக்கு மெல்ல மெல்ல கழுதையின் தந்திரம் புரிந்தது. எனவே, அதற்கு ஒரு நல்ல பாடம் கற்பிக்க நினைத்தான்.அன்று கழுதை முதுகில் வழக்கம் போல உப்பு மூட்டையை ஏற்றவில்லை வியாபாரி. மாறாக, பஞ்சு நிறைந்த ஒரு சாக்கு மூட்டையை கழுதை முதுகில் ஏற்றினான். கழுதை வழக்கம் போல ஆற்று பாலத்தின் அருகே வந்தது. எதிர்பாராமல் கால் தடுமாறுவது போல தடுமாறி ஆற்றிற்குள் விழுந்தது. மூட்டையில் இருந்த பஞ்சு நீரில் நனைந்தது. அடக் கஷ்டமே! கழுதையின் முதுகில் இருந்த பஞ்சு மூட்டை முன்பைவிட அதிகமாக கனத்தது. கழுதையும் மிகவும் கஷ்டப்பட்டு ஆற்றைக் கடந்து கரைக்கு வந்து சேர்ந்தது. தனது ஏமாற்று வேலை இவ்வளவு நாள் தன்னைக் காப்பாற்றிவந்த வியாபாரிக்குத் தெரிந்து விட்டத்தை எண்ணி வெட்கப்பட்டது. இனி நேர்மையாக நடக்க முடிவெடுத்தது.

"நாமும் நம்மை நம்பியவர், நம்பாதவர் யாரையும் ஏமாற்றக் கூடாது. அப்படி செய்தால் ஒரு நாள் நம் செயல் அவர்களுக்குத் தெரியவரும். அன்று அவமானம் அடையும் நிலை வரும். அதற்கான தண்டனையும் நமக்குக் கிடைக்கும்."

## மிருக வாழ்வில் அதிசயம்

### தாயிடம் பால் குடிக்கும் கங்காருக் குட்டிகள்.

கங்காருவின் குட்டிகளை ஜோயி என்றுதான் அழைக்கிறார்கள். ஒரே சமயம் வெவ்வேறு வயதுடைய இரண்டு குட்டிகள் அம்மாவிடம் பால் குடிப்பது உண்டு. பால்குடி மறக்காத அண்ணன் ஜோயி அவ்வப்போது அம்மாவின் மடிக்குள் தலையை விட்டு பாலைக் குடிக்கும். அதே பைக்குள் தம்பி ஜோயி ஒரு பக்கம் குடித்துக்கொண்டிருக்கும். ஒரு ஜோயி பிறந்தது முதல் கடைசிவரை ஒரே பால்காம்பில்தான் பால் குடிக்கும். தவறியும் அடுத்ததில் வாய் வைக்காது. அதனால் பாலும் அக்குட்டிகளின் வயதுக்கேற்ப தனித்தன்மையுடன் இருக்கும். வளர்ந்த குட்டி மாற்று உணவுக்குப் பழகிவிட்டதால் அதற்குக் கிடைக்கும் பாலில் அத்தனை சத்துகள் இருக்காது. வளர்ச்சியடையாத ஜோயிக்கோ அது ஒன்றே உணவென்பதாலும் வளர்ச்சிக்குத்தேவை என்பதாலும் மிகவும் சத்தான பால் கிடைக்கும். அண்ணனுக்கு தண்ணிப்பால், தம்பிக்கு சத்தான பால். சின்னதென்றால் எப்பவுமே செல்லம்தானே.



## அறிந்து கொள்வோமே

1. நவரத்தினங்கள் ஒன்பது

1. கோமேதகம்
2. நீலம்
3. பவளம்
4. புஷ்பராகம்
5. மரகதம்
6. மாணிக்கம்
7. முத்து
8. வைடூரியம்
9. வைரம்.



2. ஆஸ்கர் விருது

சினிமா விருதில் உயரிய விருது ஆஸ்கர், ஆஸ்கர் சிலையின் உயரம் - 13.5 அங்குலம் ஆஸ்கர் விருது கலவை - தங்கம், பிளாட்டினம். அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலிஸ் நகரில் 89ஆவது ஆஸ்கர் விருது வழங்கும் விழா இந்த வருடம் நடந்தது. ஆஸ்கர் விருதுகள் மொத்தம் 24 பிரிவுகளில் வழங்கப்பட்டு வருகின்றன.



## ஆறு வித்தியாசங்கள் எவை?






# இழந்த பதவி வேண்டுமா...? முருகனை வழிபடுங்கள்...!



ஆறுமுகக் கடவுளான முருகப் பெருமானுக்கு உகந்த நாள்கள் . செவ்வாய், வெள்ளிக்கிழமைகள், கிருத்திகை, சஷ்டி திதியும் உகந்தவை. அதுமட்டுமின்றி கந்தசஷ்டி, தைப்பூசம் நாட்களிலும் முருகனுக்குச் சிறப்பு பூஜைகள் நடத்தப்படுகிறது.

வெள்ளிக்கிழமை விரதம் முருகனுக்கு உகந்தது. வெள்ளிக்கிழமைகளில் முருகனை வழிபட்டால் இழந்த பதவிகளை மீண்டும் பெறலாம். வேண்டுதல் நிறைவேற வெள்ளிக்கிழமைகளில் காலையில் நீராடி முருகன் படத்திற்கு மாலை அணிவித்து விரதத்தைத் தொடங்க வேண்டும். அன்றைய தினம் எந்த கெட்ட வார்த்தைகளையும் உச்சரிக்கக்கூடாது. கந்தசஷ்டி கவசம், கந்த புராணம் படிக்க வேண்டும். ஒருவேளை மட்டும் உணவருந்தி விரதம் இருக்க வேண்டும்

அப்படி இருக்க முடியாதவர்கள் பாலும் பழமும் சாப்பிட்டு விரதம் இருக்கலாம். மாலையில் அருகில் உள்ள சிவன் கோயிலுக்குச் சென்று சிவபெருமானுக்கும், முருகனுக்கும் நெய் தீபம் ஏற்றி வழிபட வேண்டும். இந்த விரதத்தைத் தொடர்ந்து கடைப்பிடித்து வந்தால் இழந்த . பதவியை மீண்டும் பெறலாம். விரைவில் நல்ல பலன் தருவதைக் காணலாம்.

# நன்றி சொல்லுங்கள்...!

நபிகள் நாயகம் வாழ்வில் நடந்த ஒரு சம்பவம், 'நன்றி' என்ற சொலலிற்குரிய மகத்துவத்தை உணர்த்துகிறது.

ஒருமுறை நாயகம் ஒரு வீட்டிற்குச் சென்றார். அவ்வீட்டில் ஒரு குவளை தண்ணீர் வாங்கி குடித்தார். குடித்து முடித்ததும், "இப்போது நான் பருகிய தண்ணீருக்கு அல்லாஹ்வுக்கு நன்றி சொல்லாவிட்டால், வறுமை நாளில் இதனைக் குறித்து அல்லாஹ் கேள்வி கேட்பான்," என்றார்.

இதில் இரண்டு முக்கிய கருத்துகள் ஒளிந்து கிடக்கின்றன. உலகில் தண்ணீரைப் போல உயர்ந்த பொருள் எதுவும் இல்லை. மயக்கமடைந்து கிடக்கும் ஒருவன் முகத்தில் தண்ணீர் தெளிக்கிறார்கள். அவன் உடனே கண்விழித்து விடுகிறான். அவனுக்கு சிறிது தண்ணீர் புகட்டுகிறார்கள். அவன் சுதாகரித்து எழுந்து விடுகிறான். இது தண்ணீரை பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது.

தண்ணீரை சிலர் அற்பமாக பார்க்கின்றனர். அவர்களுக்கும் நாயகம் ஒரு கருத்தை சொல்கிறார். "சாதாரண தண்ணீரைத் தானே இறைவன் கொடுத்தார். இது என்ன பெரிய விடயம். நமக்கென்ன பொன்னையும், பொருளையுமா அள்ளிக் கொடுத்தார்," என்று எண்ணக்கூடாது.

இறைவன் நமக்கு அற்பமான பொருளைக் கொடுத்தாலும் கூட, காரணத்தோடு தான் கொடுப்பார். நமக்கு இறைவன் துன்பத்தையே தந்தால் கூட, "இந்த துன்பத்தை தந்ததன் மூலம், எனக்கு வாழ்க்கையில் அனுபவப்பாடத்தை கற்றுத் தந்த இறைவா, உனக்கு நன்றி. இந்த துன்பத்தை அனுபவிக்க வைத்ததன் மூலம் என் பாவங்களை குறைத்ததற்காக நன்றி," என்று சொல்ல வேண்டும்.



# நல்லவருக்கு நேர்ந்த கொடுமைகள்

"மனந்திரும்புங்கள், பரலோக இராச்சியம் சமீபித்திருக்கிறது' என்று அறை கூவல் விடுத்தார் இயேசுநாதர். அவர் மக்களின் நோய்களைக் குணமாக்கினார். இறந்தவர்களை உயிரோடு எழுப்பினார். அற்புதங்களை செய்ததால், அவரது புகழ் வளர்ந்தது. இது மத குருக்களுக்கு பிடிக்கவில்லை. உரோமப் பேரரசிடம் அவரை பற்றி அவதூறு வழக்கு தொடர்ந்தனர். அவரை அரசிடம் ஒப்படைப்பதற் காக, இயேசுவின் சீடர்களில் ஒருவனான யூதாஸ் காரியோத் என்ற சீடனை மதகுருக்கள் அணுகினர். 30 வெள்ளிக்காசு கூலியாக தரப்பட்டது. அவன் சமயம் பார்த்து காத்திருந்தான். இவ்வாறு நடக்குமென இயேசு முன்கூட்டியே அறிந்திருந்தார்.


தன் சீடர்களிடம், "உங்களில் ஒருவன் என்னை காட்டிக் கொடுப்பான். அதனால் நான் உயிர் துறப்பேன். இருப்பினும் நீங்கள் கலங்க வேண்டாம். மரித்த மூன்றாம் நாளில் நான் உயிர்த்தெழுவேன்," என்றார்.

இந்த சமயத்தில் பஸ்கா பண்டிகை வந்தது. அன்று இயேசு தன் சீடர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ரொட்டியை சிறுசிறு துண்டாக்கி கொடுத்தார். "இது என் சரீரமாயிருக்கிறது. நான் இந்த உலகிற்கு மீண்டும் வரும் வரை யிலும், என்னை நினைவு கூரும்படி இதை உண்ணுங்கள்," என்றார்.

பின்பு ஒரு கிண்ணத்தில் திராட்சை ரசம் ஊற்றி, "என்னுடைய இரத்தத்துக்கு அடையாளமாக நான் வரும் வரையிலும், இதைப் பருகுங்கள்," என்றார்.

அப்போது யூதாஸும் அங்கு இருந்தான். இயேசு கொடுத்ததை சாப்பிட்டு விட்டு, அவர் இன்ன இடத்தில் இருக்கிறார் என்பதை சொல்லிக் கொடுக்க வெளியே சென்றான். பண்டிகை முடிந்து, இயேசு கெத்சமனே தோட்டத்துக்கு சென்றார். அங்கு யூதாஸ், உரோமப் பேரரசின் மன்னன் பிலாத்தை அழைத்து வந்தான். அவன் இயேசுவிடம் விசாரணை நடத்தினான். விசாரணையில் அவர் மீது குற்றம் இருந்ததாக தெரியவில்லை. ஆனால் மத குருக்கள் விடாப்பிடியாக அவர் மீது குற்றம் சுமத்தி, சிலுவையில் அறைந்து கொல்லும்படி வற்புறுத்தினர்.

இயேசு கொல்கதா என்ற மலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு சிலுவையில் அறையப்பட்டார். முள் கிரீடம் சூட்டப்பட்டது. அவர் மரித்தார்.



புதுமதி

# கிங்கொங் படமல்ல நிஜம்



சற்றே நீளமான மூக்கு அந்தப் பெண்ணுக்கு - அவளுக்கு மூக்கு சப்பைதான் - அந்தப் பெண் கொஞ்சம் உயரம். கொஞ்சம் ஒல்லியும் கூட - அவள் அப்படி யில்லை. அவள் குள்ளம். சற்று குண்டும் கூட - அந்தப் பெண்ணின் தோல் நிறத்தில் கறுப்பு இல்லை - அவள் அடர் கறுப்பு. இந்த இருவருக்குமான பேரன்புக் கதையை அறிய 45 ஆண்டுகளைக் கடந்து நாம் பின்னோக்கி போக வேண்டும்.

அது "கறுப்பு-வெள்ளை" காலம் முடிந்து "கலர் காலம்" தொடங்கியிருந்த சமயம். 1971 ஜுலை மாதம் 4 ஆம் திகதி. அமெரிக்காவின் சன் பிரான்சிஸ்கோவின் அந்த மிருகக்காட்சிசாலையின், காவலர் (Zoo Keeper), அந்த கொரில்லா கூண்டின் அருகே சென்று கொண்டிருந்தார். இன்னும் முழுமையாக விடியாத அதிகாலை நேரம் அது. வெளிச்சம் அவ்வளவாக இல்லை. அந்தக் கொரில்லா கூண்டின் அருகே சற்று நின்று, உற்றுப்பார்த்தார். சில நொடிகளில் அவருக்குப் புரிந்துவிட்டது. வேகமாக மருத்துவர் இருந்த அறையை நோக்கி ஓடினார். சில நொடிகளில் அந்த இடத்தை எட்டிவிட்டார்.

மருத்துவர் தூக்கக் கலக்கத்தில் இல்லை. தெளிவாகவே இருந்தார். பெருமூச்சு வாங்கியபடி அந்தக் காவலர்...

"டொக்...நம்ம ஜாக்குலினுக்கு..." என்று சொல்லத் தொடங்கிய நொடி மருத்துவருக்குப் புரிந்துவிட்டது. ஒரு நொடி அறைக்குள் சென்று சில உபகரணங்களை எடுத்துக் கொண்டு, வேக நடை போட்டு கொரில்லா கூண்டை அடைந்தார்.

ஜாக்குலினுக்கு அது பெரும் வலியை கொடுக்கத்தான் செய்தது. பெண்ணாய் பிறந்த ஒவ்வொரு உயிரும் அனுபவிக்கும் பெரும் வலி அது. அந்த வலியின் வலி பெண் இனத்துக்கு மட்டுமே தெரியும். எவ்வளவு முயன்றாலும் ஆண் இனத்தால் உணரவே முடியாத அந்த வலியில் கத்தியபடியே, ஜாக்குலின் தன் குட்டியை ஈன்றாள். அத்தனை அழகாக இருந்தது அந்த கொரில்லா குட்டி. அதன் ஈரத்தை அத்தனைக் களைப்பிலும் சுத்தமாக வழித்து எடுத்தது ஜாக்குலின்.

அதே நேரம், அந்த மிருகக்காட்சி சாலையிலிருந்து சில கிலோமீற்றர் தொலைவிலிருந்த தன் வீட்டில் சோம்பல் முறித்தபடி தூங்கி எழுந்தார் பென்னி பீற்றர்சன். கல்லூரிக்கு கிளம்பினார். அன்று கல்லூரியில் நண்பர்கள் சிலர், புதிதாக பிறந்திருக்கும் கொரில்லா குட்டியைப் பற்றி பேசியதைக் கேட்டார். பென்னிக்கு இயல்பாகவே மிருகங்கள் மீது ஈர்ப்பு அதிகம். அந்த செய்தியை சாதாரணமாகக் கடந்தாலும், அந்தக் குட்டியைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு எழுந்தது. ஆனால், அப்படியே தன் அன்றாடப் பணிகளில் மூழ்கிப்போனார். இப்படியாக ஆறு மாதங்கள் கழிந்தது. உளவியல் படித்துக் கொண்டிருந்த பென்னி அந்த வருடத்திற்கான புரொஜெக்டாக "மனித மிருக உரையாடல்" என்ற தலைப்பைத் தேர்ந்தெடுத்தார்.

அன்றைய தினம் அவர் நாளிதழைப் புரட்டிக் கொண்டிருந்த போது, அந்தச் செய்தி அவர் கண்ணில் பட்டது. அது ஒரு சின்ன பெட்டி செய்தியாகத்தான் வெளிவந்திருந்தது. "தன் ஆறுமாதக் குட்டியை தன்னிடம் சேர்க்க மறுத்துவிட்டாள் ஜாக்குலின். தாயைப் பிரிந்து தனியாக தவித்து வருகிறது அந்த கொரில்லா குட்டி". இதுதான் அந்த செய்தி.

அந்தச் செய்தியைப் படித்து முடித்த அடுத்த ஒரு மணி நேரத்திற்குள், அந்த மிருகக்காட்சிசாலைக்குள் நடந்து கொண்டிருந்தார் பென்னி. தன் திட்டங்களை அந்த உரிமையாளரிடம் விளக்கிக் கொண்டிருந்தார். அந்தக் குட்டியைத் தனக்கு தரும்படி கேட்டார். பல கட்ட பேச்சுக்குப் பிறகு அது பென்னியிடம் ஒப்படைக்கப்பட்டது.

பென்னியிடம் வந்து சேர்ந்த சில மணிக்குள்ளாகவே அது..."அவள்" ஆனது. அவளுக்கு "கோகோ" என்று பெயரிட்டார் பென்னி. உலகின் ஆகச்சிறந்த அந்த உறவு அந்த நொடி தொடங்கியது. அந்தக் காலங்களில் "மிருகங்களோடு பேசுவது" என்ற தலைப்பிலான ஆராய்ச்சி மிகவும் பிரபலமாக இருந்தது. பென்னியும் அந்த ஆராய்ச்சியில்தான் ஈடுபட்டார். நான்கு வருடங்களுக்குள் இந்த ஆராய்ச்சியை முடித்துவிடலாம் என்று தொடங்கினார். அப்போது பென்னிக்கு வயது 24. இன்று 45 வருடங்களைக் கடந்தும் பென்னிக்கும், கோகோவுக்குமான பேரன்பிலான உறவு தொடர்ந்துக் கொண்டிருக்கிறது.

இன்று கோகோ "சைகை" மொழியில் மனிதர்களோடு உரையாடுகிறாள். சைகை மொழியில் உரையாட அவளுக்கு ஆயிரம் வார்த்தைகள் தெரியும். ஆங்கிலத்தில் இரண்டாயிரம் வார்த்தைகளை அவளால் புரிந்துகொள்ள முடியும். உலகில் இதுவரை எந்த மிருகமும் இவ்வளவு சரளமாகவும், தெளிவாகவும் மனிதர்களோடு உரையாடியதில்லை. கோகோ எல்லாம் பேசுகிறாள். "இரவு உணவுக்கு கடலை வேண்டும்" என்று கேட்கிறாள். "ஹப்பி கிறிஸ்மஸ்" என்று வாழ்த்து சொல்கிறாள். "கிறிஸ்மஸ் பரிசாக எனக்குப் பூனைக் குட்டி வேண்டும்" என்று கேட்கிறாள்.

ஆம்...1983 இல் கிறிஸ்மஸுக்கு தனக்கு பூனைக்குட்டி வேண்டும் என்று கேட்டாள் கோகோ. பென்னி முதலில் உயிருள்ள பூனை போன்ற ஒரு பொம்மையைத் தந்தார். ஆனால், அது பொம்மை என்பதைப் புரிந்துக் கொண்டு கோகோ கோபப்பட்டாள். பின்னர், ஒரு சாம்பல் நிற பூனையை வாங்கிக் கொடுத்தார். கோகோ அந்தப் பூனைக்கு "All Ball" என்று பெயரிட்டாள். அந்தப் பூனை அத்தனைப் பாசத்தோடு பார்த்துக் கொண்டாள். ஆனால், ஒரு வருடத்திற்குள்ளாகவே அந்தப் பூனை ஜன்னல் வழி வெளியே குதித்து ஓடியபோது, சாலையில் கார் இடித்து இறந்து போனது. பல நாள்கள் கோகோ இழப்பின் துயரில் வாடியது.

கோகோவுக்கு என ஒரு குடும்பத்தை உருவாக்க நினைத்து, மைக்கல் எனும் ஆண் கொரில்லாவை கோகோவிடம் கொண்டு வந்தார் பென்னி. ஆனால், கோகோ ஏனோ மைக்கலிடம் இணை சேரவில்லை. மாறாக இருவரும் மிக நெருங்கிய நண்பர்களாகப் பழக ஆரம்பித்தனர். அந்த இருவரின் நட்பு பலரையும் ஆச்சரியப்படுத்தியது. ஒருகட்டத்தில் மைக்கல் திடீரென இறந்துவிட மிக ஆழமான மன அழுத்தத்தில் சிக்கித் தவித்தது கோகோ. அப்படியான ஒரு நாளில், ஹொலிவுட் நகைச்சுவை நடிகர் றொபின் வில்லியம்ஸ் கோகோவைப் பார்க்க வந்தார். கோகோவோடு பேசி, விளையாடினார். கோகோவுக்கு றொபின் என்றால் மிகவும் பிடிக்கும். மைக்கலின் இழப்பிலிருந்து வெளிவர றொபினின் நட்பு கோகோவுக்கு கைகொடுத்தது. ஆனால், 2014 இல் றொபின் வில்லியம்ஸ் இறந்த செய்தியைக் கேட்டு மிகவும் மனம்வருந்தியது கோகோ.

ஒருமுறை ஒரு செய்தியாளர் பென்னியையும், கோகோவையும் பேட்டி எடுத்தபோது கோகோவிடம் "மரணம் என்றால் என்ன?" என்ற கேள்வி முன்வைக்கப்பட்டது..."ஒரு ஆழமான குழியில், அது உங்களுக்கு ரொம்பவே சௌகரியமாக இருக்கும். அந்தக் குழியில் உங்களைப் படுக்க வைத்து, ஒரு அழகான முத்தத்தோடு விடைகொடுப்பதுதான் மரணம்" என்று தன் சைகை மொழியில் சொன்னது கோகோ.

உலகமே இவர்களின் உறவை அத்தனை ஆச்சர்யத்தோடும், நேசத்தோடும் பார்த்தாலும் சில ஆராய்ச்சியாளர்களிற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஒன்று, நீண்டகாலமாக ஒரு கொரில்லாவை வீட்டிற்குள் வைத்திருப்பது மிக மோசமானது என்பது. மற்றொன்று, கோகோ பேசுவது அறிவியல் பூர்வமாக இல்லை. பல சமயங்களில் கோகோவின் சைகை மொழியைத் தவறாக மொழிபெயர்க்கிறார் பென்னி என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கிறார்கள்.

"இந்த உறவு உலகின் பார்வைக்கு எப்படியாக வேண்டுமானாலும் இருக்கலாம். அது குறித்து எனக்கு எந்தக் கவலையும் இல்லை. பூமி உருண்டை என்று ஒருவர் சொல்லிய போது, மொத்தக் கூட்டமும் அவரை அடித்து, உதைத்தது. மக்கள் அப்படித்தான். ஆனால், எனக்கும் கோகோவுக்குமான அன்பும், நேசமும், இந்த உறவும் எங்களுக்கு மட்டும் தான் புரியும். கோகோ ஒரு அற்புதமான, அழகான தேவதை" என்று சொல்லி சிரிக்கிறார் பென்னி.

அறிவியலின் கூற்றுகளை ஆராய்வது ஒரு பக்கம் இருந்தாலும்... இந்த உறவின் பேரன்பு நிச்சயம் பெயரிட முடியாதது!

1. கோகோவிடம் "நீ ரொம்ப அழகாக இருக்கிறாய்" என்று யாராவது சொல்லிவிட்டால் போதும். அத்தனை மகிழ்ச்சி அவளுக்கு வந்துவிடும்.

2. சமயங்களில் தனக்குத் தெரிந்ததை வைத்து சில புது வார்த்தைகளைக் கூட கண்டுபிடிப்பாள் கோகோ. உதாரணத்திற்கு, ஆங்கிலத்தில் சுவைப என சொல்லப்படும் மோதிரத்திற்கு, "Finger Bracelet" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிறாள்.

3. பொதுவாக காட்டிலிருக்கும் கொரில்லாக்கள், 68-லிருந்து 90 கிலோ வரையிலான எடையில் இருக்கும். ஆனால், கோகோவின் எடை 114 கிலோ.





# புதுவிதி நடத்தும் பரிசு மழை

**போட்டி - 01 -**

## முதலாம் சுற்றின் ஆறுதல் பரிசுக்கான கேள்விகள்

1. கார்த்திகைப் பூ என சிறப்பிக்கப்படும் மலரின் தமிழ் பெயர் என்ன?
2. இரத்ததானம் செய்வதை கட்டாயமாக்கிய நாடு எது?
3. இலங்கை தேயிலைக்கு அண்மையில் தடை விதித்து நீக்கிய நாடு எது?
4. தமிழர் தலைநகரம் என சிறப்பிக்கப்படும் இடம் எது?
5. 2019 உலகக்கிண்ணக் கிரிக்கெட் போட்டிகள் நடைபெறவுள்ள நாடு எது?
6. இலங்கையின் உயர்ந்த நீர்வீழ்ச்சி எது?
7. மஞ்சள் புரட்சி எதைக் குறிக்கிறது?
8. சூரியன் உதிக்கும் நாடு எது?
9. இரு கண்டங்களுக்கு சொந்தமான நாடு எது?
10. இலங்கையையும் இந்தியாவையும் பிரிக்கும் நீரிணை எது ?

01. ..............................................................

..............................................................

02. ..............................................................

..............................................................

03. ..............................................................

..............................................................

04. ..............................................................

..............................................................

### போட்டிக் கூப்பன்

போட்டி : முதலாம் சுற்றின் முதலாம் பரிசு

பெயர் : ..............................................................

முகவரி : ..............................................................

..............................................................

தே.அ.அ.இல : ..............................................................

பாடசாலை : ..............................................................

(மாணவராயின்)

தொலைபேசி இல : ..............................................................

**அனுப்ப வேண்டிய இறுதித் திகதி : 13.01.2018**

**போட்டி விதிமுறைகள் :-**

- ✓ விடைகளை மேலே தரப்பட்ட கூப்பனில் மட்டுமே எழுதி அனுப்ப வேண்டும்.
- ✓ புதுவிதி/சகோதர பத்திரிகையின் பணியாளர்கள், உறவினர்கள் இப்போட்டியில் பங்கேற்க முடியாது.
- ✓ பரிசிலுக்கு தகுதி பெறும் பட்சத்தில் தங்கள் ஆள் அடையாளங்களை உறுதிப்படுத்துதல் அவசியம்.
- ✓ குலுக்கல் முறையிலேயே பரிசுக்குரியவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.



**அனுப்ப வேண்டிய முகவரி**

**புதுவிதி**
கரடிப்போக்கு சந்தி,
கிளிநொச்சி.

உங்கள் அருகில் உள்ள முகவர்களிடம்
வைக்கப்பட்டுள்ள
பெட்டிகளிலும் சேர்ப்பிக்க முடியும்

# எல்லைக்கோடு

– ஜெ. விஜயலக்ஷ்மி –



வழி சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்ற சிறுகதை

தமிழீழத்தின் தெற்கு எல்லைக் கிராமங்களில் ஒன்றுதான் மதுரங்குளம். இக்குளத்தின் கட்டின் மீது முதிரை மரம் ஒன்று விசாலமாகக் காட்சி தருவதாலோ அன்றி இக்கிராமத்தில் குயில்கள் நிறைந்து மதுரகீதம் இசைப்பதாலோ இதற்கு மதுரங்குளம் என்று பெயர் வந்தது என்பது இன்னும் புலப்படாத வரலாறாகவே உள்ளது. அல்லது மருத நில விவசாயிகள் அழகு தொழில் விவசாயம் செய்வதால் மருதங்குளம் என்பது திரிபுபட்டு மதுரங்குளம் என்று வந்ததோ என்றும் ஐயப்பட வேண்டியுள்ளது.

வானம் வழங்கும் நன்கொடையாம் மழைச் செல்வத்தை மதுரங்குளம் வாங்கி வைப்பதால், அங்கே மூன்றுபோக வேளாண்மையும் விளைந்து நெல் மணிகள் சிந்தும் கிராமமாகவும் விளங்கியது. எவ்வளவோ நாகரிக, விஞ்ஞான வளர்ச்சியை உலகம் சந்தித்தபோதும் மதுரங்குள மக்கள் இன்னும் கலை, கலாசாரம் சிதறாமலும், மாற்றான் கையை எதிர்பாராமலும் கூட்டுறவாகச் செயற்படுவது அப்பழந்தமிழ் கிராமத்துக்கேயுரிய சிறப்பம்சம் ஆகும்.

மதுரங்குளத்து விரால் மீனை உப்பிட்டு, காயவைத்து, கருவாடு ஆக்கினால் மாலைதீவு மாசிக்கருவாடு கைகட்டிநிற்கும். கொம்புத்தேன் எடுத்து வெம்பியழும் குழந்தையின் வாயில் தடவினால், அக்குழந்தை வெம்பியதைவிட்டு விளையாடச் சென்றுவிடும். எருமை மாடு, பசுமாட்டில் பால் எடுத்து நெய்யாக்கினால் அது கைநிறையப் பணம் தந்து அவர்களது கஷ்டத்தைப் போக்கிவிடும். உப்புக்குமட்டும்தான் அவர்கள் நகரத்துக்குச் செல்லவேண்டும். அடிவளவில் கோப்பி மரம் நட்டு அதன் விதையை பெட்டகத்தில் பூட்டிவைத்து, தேவைக்கு ஏற்ப இடித்துக் கொண்டால் அவர்களுக்குத் தேயிலை தேவையில்லை.

இப்படியாகத் தம் வேலைகளைத் தாமே பூர்த்தி செய்து இல்லை என்பது இல்லை என்று தமிழ் மக்கள் வாழ்ந்த அந்தப் பூர்வீகத் தமிழ் கிராமத்தில்தான் கணபதியும், காந்திமதியும் பிறந்தது முதல் வாழ்ந்து இல்லறம் நடத்தினர். அவர்களது இல்லற வாழ்வின் இனிய நற்பேறாய் கிருத்திகா என்ற மகளும், கீர்த்திகன் என்ற மகனும் அவதரித்தார்கள். க,கா என்று அவர்களது பெயர்கள் அமைந்துவிட்டதால் கி, கீ என்ற எழுத்துக்களில் பிள்ளைகளுக்குப் பெயரிட்டு உயிர் மெய் எழுத்து முன் நான்கையும் தங்கள் பெயரில் பதித்துக்கொண்டனர். தம்மைப்போல் கல்வியறிவு இல்லாதவர்களாகத் தம் பிள்ளைகளும் இருக்கக்கூடாது என்பதற்காக இயன்றவரை கஷ்டப்பட்டு அவர்களைக் கல்விக்கூடத்திற்கு அனுப்பினான் கணபதி.

அது இந்திய இராணுவம் தமிழீழத் தின் மூலை முடுக்குகள் எல்லாம் நாயாக அலைந்து திரிந்து, பேயாகத் தமிழனின் குருதி குடித்த காலம். அது மட்டுமா? ஈழத்தமிழனின் போக்குவரத்து, பொருளாதாரம், கல்வி என்பவற்றைச் சீரழித்த காலமும்தான். தமிழர் பிரச்சினையைத் தீர்க்கிறோம் என்றுகூறி, அமைதிப்படை என்று அணிவகுத்து வந்து, இறுதியில் புலிகளைப் பிடிக்கிறோம் என்று சொல்லி, தமிழ் மக்களைச் சித்திரவதை செய்து தமிழ் மண்ணையே வதைகூடமாக மாற்றி ஒவ்வொரு தமிழ் மகனையும் புலியாக்கிய நேரம்.

இதற்கு மதுரங்குளம் மக்கள் மட்டும் விதிவிலக்கா? பரம்பரையாக வேளாண்மை செய்து வந்த வயல் நிலத்தில் இந்திய இராணுவம் முகாமிட்டிருந்ததால், அவ்வூர் மக்கள் தமது தொழிலை இழந்தனர். செய்தொழில்விட்டு வேறு தொழில் செய்வது இலேசான காரியமா? அவர்கள் வாழ்வில் பட்டினி விளையாடியது? ஐம்பத்தெட்டு, எழுபத்தேழு, எண்பத்துமூன்று என்ற இனக் கலவரங்களில் அடிபட்டு வந்த தமிழ் மக்களை வவேற்று உபசரித்த வன்னி மண் மக்கள் இன்று தம் வயிற்றுப் பசி தீர்க்க நகரத்திற்குச் சென்று தம்மால் இயன்ற கூலிவேலைகளை செய்யத் தொடங்கினர்.


தான் பெற்ற குஞ்சுகளை வளர்க்க கணபதியும் மேசன் வேலை செய்ய வீட்டை விட்டுப் புறப்பட்டான். முட்டாள் என்ற பதவியில் அமர்ந்து அன்றாடம் நூறு ரூபாய் சம்பாதித்து அவர்களது வாய், வயிற்றைக் கழுவினான். அப்படியானால் ஏனைய செலவுக்கு? அவனது கடுமையான உழைப்பின் நிமிர்த்தம் மேசன் என்று பதவி உயர்த்தப்பட்டதால் நகரத்தில் உள்ள நகைக் கடைக்கார நடராசா முதலாளியின் கடை வேலையை ஒப்பந்தம் எடுத்துச் செய்தான். வழமைபோல் அவன் வேலை செய்துகொண்டிருந்த சமயம், இந்திய இராணுவம் புலி வேட்டையில் இறங்கியுள்ளதாம் என்ற செய்தி அவன் வேலை செய்யும் இடத்திலும் பரவியது. தெருவெல்லாம் மக்கள் சுறுசுறுப்படைந்து விரைவாகப் போவதும் வருவதுமாய் இருந்தனர். கணபதிக்கும் பயம்தான். 'வந்தால் வரட்டும். மேசன் கரண்டியைக் கொடுப்போம், அவர்களும் எமக்கு உதவி செய்யட்டும்." என்று மற்றத் தொழிலாளர்களுக்குக் கூறினான்.

ஐயோ! உதவி வேண்டாம்! உபத்திரம் இல்லாட்டிக் காணும்." என்று மற்றத் தொழிலாளி கூற, எல்லோரும் கொல் என்று சிரித்தனர். சிரிப்பொலி அடங்க முன் திடுதிடுஎனச் சத்தம் கேட்டது.

கணபதி திரும்பிப் பார்த்தான். இரு இளைஞர்கள் ஓடி வந்தனர். வந்தவுடன் ஒருவன் கையிலிருந்த மேசன் கரண்டியைப் பிடுங்கித் தான் வேலை செய்தான். மற்றவன் தான் வைத்திருந்த கைப்பையை கணபதியிடம் கொடுத்துவிட்டு சிமெந்துக் கலவையை வாளிக்குள் அள்ளினான்.

கைப்பையைத் திறந்து பார்த்தான் கணபதி. உலகமே சுற்றுவதுபோல் இருந்தது அவனுக்கு. நிலைமையை விளங்கிக் கொண்ட கணபதி அமைதியானான். கண் இமைப்பதற்குள் ஐந்தாறு இந்தியச் சிப்பாய்கள் கட்டடத்துக்குள் புகுந்தனர். அதில் ஒருவன் 'தம்பி எல்.ரி.ரீ. இருக்கா எல்.ரி ரீ ?" என்று கேட்டான், மற்றொருவன் இந்தப்புறத்தால ரெண்டு எல்.ரி.ரீ. பசங்க ஓடி வந்தாங்களா? இப்படி வந்தாங்களா? என்று கேட்ட வண்ணம் வெளியே சென்றான்.

கணபதியின் இதயத்துடிப்பை வென்றுகொண்டு இந்தியச் சிப்பாய்கள் அவ்விடத்தைவிட்டு வெளியேறினார்கள். ■





# தண்ணி அடித்தல் வேண்டாம் தண்ணீரில் நீச்சல் அடித்தல் போதும்

புத்தாண்டை வரவேற்க வெடி கொழுத்துகிறோம். நள்ளிரவு ஆட்டத்தோடு வரவேற்கிறோம். ஆனால் இவர்களோ சற்று வித்தியாசமாக, ஆற்றிலோ ஏரியிலோ குதித்து, தண்ணீரில் மூழ்கி, மகிழ்ச்சியிலும் மூழ்கியிருக்கிறார்கள்.

புதுவருடப் பிறப்பன்று அதாவது கடந்த திங்களன்று, உலக நாடுகள் பலவற்றில், நீச்சல் விரும்பிகள் பலர், தண்ணீரில் குதித்து, இந்த நாளை வருக வருகவென வரவேற்றுள்ளார்கள்.

குளிர் காலம். வெடவெடக்கும் குளிர் என்பதை இவர்கள் பொருட்படுத்தவில்லை. பேர்லின் நகரில் உள்ள நீச்சல்காரக் கழக உறுப்பினர்கள் அனைவரும், பல நிறங்களைக் கொண்ட தொப்பிகளை அணிந்தபடி, கோமாளிகள் போன்று உடை உடுத்து, இங்குள்ள ஓரங்கா என்ற ஏரியில் கும்மாளமடித்துள்ளார்கள்.

நெதர்லாந்தின் செவிநிங்கன் என்னும் இடத்தில், நூற்றுக்கணக்கானவர்கள் ஒன்றுகூடி சிவப்பு நிறத் தொப்பிகள் அணிந்தபடி, 4பாகை செல்டிகிரேட் வெப்பநிலையிலுள்ள வடகடலில் குதித்துள்ளார்கள். ரோம் நகரிலோ நீச்சலடிப்பவர்கள் தைபர் நதிக்கு குறுக்காக 18 மீற்றர் உயரத்தில் உள்ள பாலத்திலிருந்து குதித்து மகிழ்ந்திருக்கிறார்கள்.

அதே சமயம் பிரான்ஸ் நாட்டின் டுன்கேக்ர்க் என்னும் இடத்தில் உள்ள நீச்சல் விரும்பிகள், பொய் மீசை பொருத்தி, தலையில் 'விக்' வைத்துக் கொண்டு, பழைய காலத்து நீச்சல் உடைகளில் காணப்பட்டுள்ளார்கள், இது எல்லாவற்றையும் மிஞ்சுவதுபோல, சீனத் தலைநகரான பெய்ஜிங்கிங்கில், உறைய வைக்கும் குளிரையும் பொருட்டுத்தாது, உறைந்த நிலையிலிருந்த ஏரியொன்றில் குதித்து எழுந்துள்ளார்கள். பிரிட்டனில் மட்டும் பேசாமல் இருந்துவிடுவார்களா? இங்கே,குறிப்பாக கடற்கரைக் கிராமங்களில் உள்ளவர்கள் இந்தப் புத்தாண்டு நீச்சலைத் தவற விடுவதில்லை. குளிரான காலநிலை பற்றி இவர்கள் அலட்டிக் கொண்டதாகத்தெரியவில்லை. 'தண்ணி அடித்தே' கொண்டாட்டங்களை குதூகலமாக்கும் இவர்கள், 'தண்ணியில் நீச்சல் அடித்து' கொண்டாடுவது சற்று வித்தியாசமானதுதான்.

# கழிவிலே கலைவண்ணம் கண்டாளோ?

கழிவு என்றதுமே முகத்தை சுளிப்பவர்கள் நாம். கழிவு யாருக்குமே பிடிப்பதில்லை. ஆனால் சிலர் கழிவை வைத்து களிப்படையும் இரகசியத்தை உங்களுக்குச் சொல்லப்போகின்றார்கள். இதை ஆடை அதிசயத்தை அறிமுகம் செய்தவர் 26 வயதான ஆடை வடிவமைப்பாளர் ஒருவர். அமெரிக்காவின் வடகரோலினா பிராந்தியத்தைச் சேர்ந்த இவர் பெயர் மியேர்ஸ். இவர் ஏற்கனவே சில உடைகளை வித்தியாசமாக வடிவமைத்த உலகப்புகழ்பெற்ற ஆடை வடிவமைப்பாளர் என்பதை நாம் இங்கு கவனித்தாக வேண்டும். கிறிஸ்மஸ் காலப் பரிசுகளைப் பொதிகளாக்க, விசேடமான பொதி கற்றும் தாள்களை விற்பனைக்கு விடுவார்கள். இந்த வடிவமைப்பாளர், ஒலிவியா மியேர்ஸ், கிழிக்கப்பட்டு, கழிக்கப்பட்டு வீசப்படும் இந்த பொதி உறைகளைக் கொண்டு, மிக அழகிய ஆடையை வடிவமைத்து அசத்தியிருக்கின்றார். 2014இலும் இப்படியான ஆடைகளை இவர் உருவாக்குவதில் ஈடுபட்டிருந்துள்ளார். இந்தப் பொதியிலுள்ள அழகிய தாளும், நிபுணும் அநியாயமாகப் போகக்கூடாது என்ற நினைப்பில் எழுந்ததுதான் இந்த ஆடை என்கிறார் இந்தப் பெண். மேலதிகமாகத் தேவைப்படுவது ஒட்டும் பசையும், அளவுகளைக் கண்டறிய ஒரு அளவை நாடாவுந்தான் என்கிறார் இவர் உற்சாகமாக! 2016இல் இப்படியான ஆடைகளை வடிவமைப்பதை இவர் நிறுத்தியிருந்தார். இனிஇது வருடா வருடம் தொடரும் என்கிறார் இந்த இளமங்கை. கழிவிலும் களிப்படைதல் கண்டீரோ?







# மாண்டவர் மீண்ட கதை இது

7 மாதங்களுக்கு முன்பு தகனம் செய்தவர், வீட்டு முன்கதவு வழியாக, எதுவுமே நடக்காதவர் போல, உள்ளே நுழைந்து வந்தால், உங்கள் மனநிலை எப்படி இருக்கும்?

நிஜத்தில் இது சம்பவித்துள்ளது. தாய்லாந்து குடும்பம் ஒன்றில்தான் இந்த அதிர்ச்சியான சம்பவம் நடந்துள்ளது.

இந்த "இறந்து மீண்ட" 44 வயதான சக்கோர்ன் சச்சீவாவா, நாட்டின் வேறொரு பிராந்தியத்தில் ஒரு மீன்பிடிப் படகில் தொழிலாற்றி விட்டு, 2 வருடங்களின் பின்பு தன் வீட்டுக்கு திரும்பியிருந்தார். இந்த 2 வருட இடைவெளியில், தன் குடும்பத்தாரோடு இவர் எந்தவித தொடர்பையும் வைத்துக் கொள்ளவில்லை. எனவே தனக்கு நல்ல வரவேற்பு கிடைக்காது என்பது அவருக்கு நன்றாகவே தெரிந்திருந்தது. ஆனால் தன்னை ஒரு 'ஆவியாக' நினைத்து, வீட்டுக்காரர்கள் அலறியடித்து ஓடுவார்கள் என்று அவர் எப்படி நினைத்திருப்பார்? கடந்த வருடம் மே மாதம் சச்சீவா தொழில் செய்யும் பிராந்தியப் பொலிஸார், சமிபாட்டுக் கோளாறு காரணமாக இவர் இறந்துவிட்டதாக இவர் குடும்ப அங்கத்தவர்களுக்கு அறிவித்திருந்தார்கள். இறந்த உடலை நேரில் வந்து பார்த்து எடுத்துச் செல்லும்படியும் அறிவித்திருந்தார்கள். பாங்கொக் நகரம் பயணமாகிய குடும்பத்தவர்கள், அங்குள்ள பல்கலைக்கழக சவக்கிடங்கிலிருந்து உடலை எடுக்கப் போயிருந்தார்கள். அடையாளம் காணமுடியாத வகையில் உடல் உப்பியிருந்தது. முன்பல்வரிசையைப் பார்த்து விட்டு சச்சீனாவின் 55வயது மைத்துனன் இது தன் மைத்துனன் அல்ல. பற்கள் இரண்டைக் காணோம் என்று அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளார். ஆனால் அவர்களோ பிடிவாதமாக உடம்பை எடுத்துச் செல்லுங்கள் என்று கூறிவிட்டார்கள்.

அவர்களுக்குக் கிடைத்தது திருட்டுப் பயலின் உடல்தான். என்ன செய்வது? வேண்டாவெறுப்பாக அந்த உடலும் எடுத்துச் செல்லப்பட்டு, வழமையான 3 நாள் மதச் சடங்குகளின் முடிவில் தகனம் செய்யப்பட்டிருக்கின்றது.

எப்படி இது சம்பவித்தது? சச்சீனாவின் அடையாள அட்டை ஒரு கடை மையன்மாரில் அவருடன் கூட வேலை செய்த ஒருவனால் திருடப்பட்டுவிட்டது. இதை பொலிஸாரிடம் அறிவித்த போது, அவர்கள் புது அட்டையொன்றை கொடுத்துள்ளார்கள். இத்துடன் இந்த அடையாள அட்டை களவு விவகாரம் ஒருமுடிவுக்கு கொண்டுவரப்பட்டு விட்டது. திருடனைத் தேடும் பணியில் இறங்கவில்லை. அதிகாரிகளின் இந்த அசமந்தப் போக்கு எத்தனை விபரீதங்களைக் கொண்டு வந்து சேர்த்துள்ளது பார்த்தீர்களா?

- ந. மதியழகன் -

# யாழ். மாநகர சபை: வெளிக் கிளம்பும் பூதங்கள்



யாழ்ப்பாணம் மாநகர சபையில் தொடர்ந்தும் வீணடிக்கப்படும் பலகோடி ரூபாக்கள் ...தியிலான சொத்துக்கள் தொடர்...ில் பொறுப்புக்கூறி உ.ரிய தீர்வை வழங்கவேண்டிய அதிகாரிகள் நீண்டகாலமாகவே அரசியல்வாதிகளுக்குக் கட்டுப்பட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

உள்ளூர் அதிகார சபைகளில் பலம் பொருந்திய பெரிய சபையாக விளங்குவது மாநகர சபை வடக்கு மாகாணத்திலேயே ஒரேயொரு மாநகர சபையான யாழ்ப்பாண மாநகர சபை கடந்த காலத்தில் பல நிர்வாகச் சிக்கலுக்குள் அகப்பட்டு, அதனை தீர்ப்பதற்குப் பதிலாக மூடி மறைக்கப்பட்ட வருகிறது சொத்துக்களை நேரடியாகவே நாசம் செய்தும், துஸ்பிரயோகத்திற்கு உட்பட்டும் வருகின்றது.

இருப்பினும் தற்போது பலரும் அது தொடர்பில் கேள்வி எழுப்ப முனைந்தாலும் அதுவும் தேர்தலிற்கானது எனவும் முத்திரை குத்தப்படுகின்றது. கடந்த ஒரு தசாப்த காலத்தில் மாநகர சபையில் ஏற்பட்டுள்ள இழப்புக்கள், துஷ்பிரயோகங்கள் , சொத்து அழிவுகள் , பொறுப்பற்ற செயல் எனப் பட்டியல் நீழ்கின்றது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான “பிக்கப்” வாகனம் ஒன்று கடந்த 2014ம் சாட்டி கடற்கரைக்குச் சென்றுவரும் வழியில் விபத்திற்கு உள்ளானது. அவ்வாறு விபத்திற்கு உள்ளான பிக்கப் வண்டி முழுமையாகச் சின்னா பின்னதாகியது. இருப்பினும் அது தொடர்பான ஆக்க பூர்வமான தீர்வு இன்றுவரை முன்வைக்கப்படாது தற்போது 4 ஆண்டுகள் கடந்த நிலையிலும் “விசாரண இடம் பெறுகின்றது”, என்ற பதிலே கிடைக்கின்றது. குறித்த விப...்தினால் பிக்கப் வண்டிக்கு ஏற்பட்ட மொ...்தச் சேதம் அப்போதைய பெறுமதியில் 18 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டது. அவ்வாறு 18 லட்சம் செலவு செய்தாலும் முழுமையாகப் பழைய நிலையில் இயங்கு சக்தி காணப்படுமா? என்றும் கேள்வி எழுப்பப்பட்டது.

இருப்பினும் இவ் விபத்துத் தொடர்பில் இடம்பெற்ற ஆரம்ப விசாரணைகளின் பிரகாரம் விபத்திற்குத் தனிப்பட்ட விடயமே காரணமாக அமைவதனால் திருத்தச் செலவினை அதில் பயணித்த பணியாளர்களே பொறுப்பேற்க வேண்டும் எனப் பரிந்துரைத்தது. இருப்பினும் அதனை ஏற்க மறுத்த அதில் பயணித்த பணியாளர்கள் அதற்குத் தாம் பொறுப்பில்லை என அறிக்கை இட்டுச் சாரதியின் தலையில் மட்டும் முடி சூடுகின்றனர் இதனால் இரண்டாம் கட்ட விசாரணை இடம் பெறுகின்றது. இதேநேரம் இந்த விசாரணையில் பணியாளர்கள் சார்பில் முன்னிலையான ஓர் மூத்த அதிகாரியே முடிவு சொல்லும் உச்ச கட்டமைப்பின் அதிகாரியாக தற்போது உள்ளதனால் அதற்கான தீர்வு அல்லது சரியான நீதி கிடைக்குமா ? என்ற சந்தேகம் எழுப்பப்படுகின்றது.

இதே போன்று 2016ஆம் ஆண்டு செப்பரம்பர் மாதம் ஒரு பெண் பணியாளர் பெருந்தொகைப் பணத்தினை மோசடி செய்தமை கண்டு பிடிக்கப்பட்டது. அது ஆரம்பத்தில் 18 லட்சம் எனக் கூறப்பட்டாலும், ஒரு மாத ஆய்வில் அத்தொகை 28 லட்சம் ரூபா என உறுதி செய்யப்பட்டது. இந்த 28 லட்சம் ஷரூபாவினைக் கையாடல் செய்தமையினைக் குறித்தமையை ஏற்றுக்கொண்டு எழுத்தில் ஒப்புதல் கடிதமும் வழங்கியிருந்தார். இதனால் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டார்.



இந்த விடயத்திலும் நிர்வாக ரீதியான ஒழுக்காற்று விசாரணையும் சட்ட ரீதியாக பொலிசில் முறைப்பாடும் பதியப்பட்டது. ஒழுக்காற்று விசாரணையின் ஆரம்ப கட்ட விசாரணையின் பின்னர் குற்றச்சாட்டுப் பத்திரம் வழங்கப்பட்டது. அதனை ஏற்றே குறித்த பணியாளர் 1,70,000 ( ஒரு லட்சத்து எழுபதாயிரம் ) ரூபா மட்டும் செலுத்தினார் எஞ்சிய பணத்தை செலுத்த வசதி இல்லையாம் எனத் தெரிவித்து தனது பணியை மீள வழங்கும் பட்சத்தில் மாதாந்த சம்பளத்தில் இருந்து வழங்குவதாக தெரிவித்துள்ளார்.

இதன்பால் குறித்த விடயத்திற்கான தீர்வும் இன்றுவரையில் எட்டப்படாமலேயே கிடப்பில் உள்ளது. இந்த வரிசையில் யாழ்ப்பாணம் மாநகர சபையை முன்னர் நிர்வகித்தவர்களின் சீரின்மையால் யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான சொத்துக்கள் காலத்திற்கு காலம் வீண்விரயமாக்கப்படுகின்ற போதும் . இந்த வகையில் யாழ்ப்பாணம் மாநகர சபையிலே சொத்துப் பதிவேட்டின் பிரகாரம் 140 வாகனங்கள் கைவசம் உள்ளது. இதில் 83 வாகனங்கள் மட்டுமே தற்போது இயங்குகின்றன. மேலும் 57 வாகனங்கள் பழுதடைந்த நிலையில் உள்ளது. இதில் உழவு இயந்திரம் மட்டும் 45 கைவசம் உள்ளபோதிலும் அரைவாசியிலும் அதிக எண்ணிக்கை பழுதடைந்த நிலையிலேயே காணப்படுகின்றது. அதாவது 17 உழவு இயந்திரங்கள் மட்டுமே இயங்கு நிலையில் காணப்படுகிற அதேவேளை 28 உழவு இயந்திரங்கள் பழுதடைந்து பராமரிப்பு இன்றி வெட்டை வெளியில் வெய்யிலிலும் மழையிலும் சபை வளாகத்திலே காணப்படுகின்றது.

இவ்வாறு மழை , தண்ணீரில் நனைகின்ற உழவு இயந்திரங்களைத் திருத்தி அல்லது அதனை குறைந்த விலையில் ஏலத்தில் விற்பதற்கான எந்த நடவடிக்கையினையும் மேற்கொள்ளாத மாநகர நிர்வாகம் தமது பயன் பாட்டிற்கு மேலும் உழவு இயந்திரம் வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துப் புதிய உழவு இயந்திரங்களைக் கொள்வனவு செய்ய அவசர அவசரமாக நடவடிக்கைகளில் இறங்கியிருப்பது தற்போது தெரிய வந்துள்ளது.

இதற்காக உடனடியாக 10 உழவு இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கான அனுமதியை சபை உள்ளூராட்சி திணைக்களம் ஊடாக கோரி அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டு அந்த நிதிக்கான திறைசேரி அனுமதிக்கும் சிபார்சு செய்யப்பட்டு விட்டது. இதற்கான நிதியாக சபையின் கையிருப்பில் உள்ள நிரந்தர வைப்பில் இருந்து உரிய பணம் எடுக்கப்படுவதற்கான அனுமதிகளும் வழங்கப்படுகின்றன.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலிற்கு திகதியிடப்பட்டு அனைத்து ஏற்பாடுகளும் இடம்பெறும் நிலையில் புதிய முதல்வர் தேர்வின் பின்னரே குறித்த விடயம் ஆராயப்பட வேண்டுமே அன்றி அவசரமாக கொள்வனவு கூடாது எனவும் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஏனெனில் தற்போது சபையில் பழுதடைந்த நிலையில் உள்ள 57 வாகனங்களில் திருத்தம் செய்ய முடியாத வாகனங்கள் என சபையினால் அறிக்கை இடப்பட்டுள்ளவை சகல வாகனங்களும் உள்ளடங்களாக 21 வாகனங்கள் மட்டுமே ஆகும். ஆனால் அங்கே உழவு இயந்திரம் மட்டும் 28 பழுதான நிலையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதெனில் அவற்றில் எத்தனை திருத்த முடியும் என்ற எழுப்பப்படும் கேள்விக்கு பதிலளிக்க வேண்டியவர்கள் யார்?

இதேநேரம் மாநகர சபையினால் எழுத்தில் தகவல் அறியும் சட்டத்தில் வழங்கப்பட்ட தகவலிலும் தற்போது ஒரு கேள்வி எழுகின்றது. அதாவது சபையில் மொத்தம் 4 பிக்கப் வாகனங்களே உள்ளன என்றும் அவை நான்கும் இயங்குவதாக குறிக்கப்பிடப்பட்டுள்ளதால் சாட்டியில் விபத்திற்கு உள்ளாகி இன்றவரை பயன்படுத்தவே முடியாத வகையில் சேதமடைந்த பிக்கப் வாகனத்தின் தரவு மறைக்கப்படுகின்றதா ? என்ற ஐயமும் உள்ளது.

இதேபோன்று முன்னர் ஆட்சி செய்த கட்சி விசுவாசிகளினால் சபைக்குச் சொந்தமான பல கட்டிடங்கள் 2ஆம் நிலையாகப் பெற்று வாடகை செலுத்தப்படாமல் உள்ளதோடு இதற்கான மின்சாரக் கட்டண நிலுவைகளும் செலுத்தப்படவில்லை. இதனால் பல லட்சம் ரூபா வருமான இழப்பும் ஏற்பட்டுள்ளது. கஸ்தூரியார் வீதி கடைத்தொகுதி இன்றுவரை தீர்வின்றியே தொடர்கின்றது.

இவ்வாறெல்லாம் குளறுபடிப் பட்டியல் நீண்டு செல்லும் நிலையில் இதனைச் சட்டரீதியிலும் நிர்வாக ரீதியிலும் தடுக்கும் அதிகாரத்தில் உள்ளவர் ஈழத்துக் கட்டுமரம் போன்று வாரம் ஒரு வினாவிற்கு விடை மட்டுமே எழுதுகின்றார் என்பதே வேடிக்கையும், வேதனைக்குரியதுமாகின்றது.

# வயது வந்தோர்க்கு மட்டும் – 07

– ஜெயராணி –

கல்விப் பரவலாக்கம் இவ்வளவு நடந்தும், நம் நாட்டில் ஆய்வாளர்கள் குறைவு, விஞ்ஞானிகள் குறைவு, பல துறைசார் வல்லுநர்களுக்குத் தட்டுப்பாடு இருக்கிறது. அடுத்த தலைமுறைக்கு ஆசிரியர்கள் இருப்பார்களா என்பது தெரியவில்லை. அரசாங்க பணியோ, வேறு வேலையோ கிடைக்காததால் இந்த வேலைக்கு வந்தார்கள் என்பதே பலரும் ஆசிரியராகக் காரணமாக இருக்கிறது.

ஒரு முறை ஒரு பாடசாலைக்கு விருந்தினராக அழைக்கப்பட்ட போது, மாணவர்களிடம் 'நீங்கள் என்னவாக விரும்புகிறீர்கள்?' என்ற வழக்கமான கேள்வியைக் கேட்டேன். டொக்டர், என்ஜினியர் என்பதைத் தாண்டி எதுவும் சொல்லப்படவில்லை. 'ரீச்சர்?' எனக் கேட்ட போது, எல்லோருமே 'இல்லை' என மறுத்துவிட்டனர். என்னுடைய வியப்பு என்னவென்றால், நல்ல ஆசிரியர்களை உருவாக்காமல் நல்ல பாடசாலைகள் மட்டும் இருக்க வேண்டுமென நாம் எப்படி நினைக்கிறோம்! நல்ல பாடசாலை என்பதற்கான விளக்கம் என்ன? அதன் கட்டமைப்பு வசதிகளும் உயர் கட்டணங்களுமா? இல்லவே இல்லை. நல்லாசிரியர்கள் இருக்குமிடம்தான் நல்ல பாடசாலை.

பணம் சம்பாதிப்பதுதான் நோக்கம் என்றால், அந்தப் பணம்தான் சந்தோசமாக வாழ வைக்கும் என்றால், அதற்காக நம் குழந்தைகள் இத்தனை ஆண்டுகாலம் பாடசாலையில் உழலத் தேவையில்லை. சரவணா ஸ்ரோர்ஸ் முதலாளி தொடங்கி பில் கேட்ஸ் வரையிலான பெருங்கோடீஸ்வரர்கள் அதை ஏட்டுக்கல்வியால் சாதிக்கவில்லை. ஒரு சில மாதங்களுக்கு முன்னர் எரிக் ஃபின்மேன் என்ற சிறுவனின் பெயர் இணைய வர்த்தகச் செய்திகளில் பிரபலமானது. 2011 ஆம் ஆண்டு தனது 12 வயதில் பாட்டி அன்பளிப்பாகக் கொடுத்த ஆயிரம் டொலரை டிஜிற்றல் பணமான பிட்கொயினில் முதலீடு செய்தார். தற்போது அது ஒரு லட்சம் டொலராக வளர்ந்து எரிக் ஃபின்மேனை 18 வயதில் மில்லியனராக உயர்த்தியிருக்கிறது.

பள்ளிப்படிப்பு வெறுத்துப் போயிருந்த எரிக் இணையப் பொருளாதாரத்தில் ஆர்வம் கொண்டிருந்தார். தன்னைப் பள்ளியிலிருந்து நிறுத்திவிடுமாறு பெற்றோரை நச்சரித்தார். 'நான் கூடிய விரைவில் மில்லியனராகி விட்டால் பாடசாலைக்கு அனுப்பக்கூடாது' எனச் சவால் விட்டார். அப்படியே நடந்தது. எரிக்கின் சாதனையைவிட, பாடசாலைகள் குறித்து அவர் கூறிய கருத்து கவனிக்கத்தக்கதாக ஆனது.

'பள்ளிகள் மிகவும் தரம் குறைந்ததாக இருக்கின்றன. ஆசிரியர்கள் எல்லா வகையான நெகட்டிவ் மனநிலையையும் கொண்டுள்ளனர். ஓர் ஆசிரியர் என்னைப் படிப்பை விட்டுவிட்டு மெக்டொனால்ட்ஸில் வேலைக்குப் போகச் சொன்னார். நான் அதற்குத்தான் லாயக்காம். நான் முதலாவதை மட்டும் செய்தேன். பள்ளியை விட்டு நின்றேன். இன்றைக்கு இருக்கிற கல்வித் தரத்தை வைத்து நான் அதை யாருக்கும் பரிந்துரைக்க மாட்டேன். அதற்குப் பதில், நான் இணையத்தைப் பரிந்துரைப்பேன். அதில் எல்லாமே இலவசமாகக் கிடைக்கின்றன. மில்லியன் மடங்கு அதிகமாக யூடியூபிலும் விக்கிப்பீடியாவிலும் நீங்கள் கற்க முடியும்" என்ற எரிக் 2014 இல் அதாவது தனது 15 ஆவது வயதில் ஒன்லைன் கல்வி நிறுவனத்தைத் தொடங்கினார். அவரைப்போல பள்ளியை வெறுப்பவர்கள் வீடியோ சட்டிங் மூலமாகத் தங்களுக்கான ஆசிரியரைக் கண்டறிந்து கல்வியைத் தொடரலாம்.

குழந்தைகள் பாடசாலையை வெறுக்கத் துவங்கிவிட்டதை நாம் இன்னும் உணரவில்லை. எரிக் வேறு நாட்டைச் சேர்ந்தவர் என்றாலும், அவர் பேசும் விடயங்கள் நமக்கும் பொருந்தக் கூடியவை. இன்றைய குழந்தைகளால் தனக்கு ஆர்வமுள்ள அத்தனை விடயங்கள் குறித்தும் இணையத்தின் வழி கற்றுக்கொள்ள முடியும். தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சி ஆசிரியரின் தேவையையும் பள்ளிகளின் தேவையையும் இல்லாமல் செய்து வருகிறது. ஓவியம், இசை போன்ற கலைகள் தொடங்கி அறிவியல் தொழில்நுட்பம் வரை குழந்தைகள் தமக்கு விருப்பமானவற்றை ஒன்லைனில் படிக்கின்றனர். இப்படியான மெய்நிகர் கல்விக்கான காலம் நெருங்கி வருகிற நிலையில், இன்றும் மதிப்பெண் என்ற அங்குசத்தைப் பயன்படுத்திக் குழந்தைகளைப் பள்ளிகளுக்குள் முடக்குவது கொடுமையானது. தகவல்களுக்கும் அறிவுக்கும் நிறைய எக்ஸ்போஸ் ஆவதால் குழந்தைகளின் ஸ்மார்ட்னெஸ் கட்டுக்கடங்காததாக இருக்கிறது. அந்தந்தக் காலகட்டத்திற்கு ஏற்ப இந்த வளர்ச்சி ஒவ்வொரு தலைமுறைக் குழந்தைகளிடமும் இருந்தது என்றாலும், இந்தத் தகவல் தொழில்நுட்பக் காலம் ஒரு பெரும் பாய்ச்சலைக் குழந்தைகளின் அறிவுவளர்ச்சியில் நிகழ்த்தியிருக்கிறது.

'குழந்தையைப் பாடசாலைக்கே அனுப்ப வேண்டாம் என்கிறீர்களா?' நிச்சயமாக இல்லை. எப்போதுமே பள்ளிகளுக்கான தேவை இருக்கிறது. ஆனால், நினைப்பதைப் போல வெறுமனே படித்து மதிப்பெண் வாங்குவதற்காக மட்டுமல்ல... வேறு இரண்டு முக்கியமான விடயங்களுக்காக. ஒன்று, நற்பண்புகளைக் கற்றல். இரண்டாவது, சமூக உறவை மேம்படுத்துதல்.


பெற்றோர் மற்றும் இரத்த உறவுகளைத்தாண்டி ஒரு குழந்தையின் சமூக உறவு என்பது பள்ளியில்தான் தொடங்குகிறது. சாதி, மத பேதங்களைக் கடந்து சமூக வாழ்க்கை என்பது பாடசாலையில்தான் சாத்தியப்படுகிறது. அனைவரும் சமம் என்பதை அறிவிக்கத்தான் சீருடையே உருவானது. பாடப் புத்தகங்களைத் தாண்டி, சமூகக் கல்வியை ஆசிரியர்கள் போதிக்க வேண்டும். ஒற்றுமையாக இருத்தல், பாகுபாடின்றி வாழ்தல், அனைவரையும் மதித்தல் என, சமூகக் கலப்பிற்கான இடமாகக் கல்விக் கூடங்கள் மாற்றப்பட வேண்டும். அதே போல, நற்பண்புகளை வளர்த்தெடுத்தலும் பள்ளிகளின் பணிதான். அன்பு செலுத்த வேண்டும், பொய் சொல்லக் கூடாது, திருடக் கூடாது, ஏமாற்றக் கூடாது, பேராசைப்படக் கூடாது, கோபப்படக் கூடாது போன்ற விஷயங்களைக் கற்பித்தல். பாடசாலையிலிருந்து ஒவ்வொரு மாணவரும் நல்ல மனிதராக வெளியேறி வர வேண்டும். அதுதான் கல்வியின் அடிப்படைப் பணி. சாதனையாளர்களை உருவாக்குவதற்குப் பள்ளிகள் தேவையில்லை.

வேப்ப மரத்தடியில்கூடப் பாடம் கற்பிக்கலாம். ஆனால், ஆசிரியர் என்ன சொல்லுகிறார், மாணவர்கள் என்ன உள்வாங்குகிறார்கள் என்பதுதான் முக்கியம். கட்டடங்களையும் கட்டணத்தையும் வைத்துப் பள்ளிகளை எடை போடுவதை நிறுத்திவிட்டு, குழந்தைகளுக்கு உண்மையான கல்வியை உறுதி செய்து தர வேண்டியது மிக மிக அவசரம். ஆண்டுக்கு சுமார் 200 நாள்கள், ஒவ்வொரு நாளும் ஏழு மணி நேரம், ஏறக்குறைய 13 ஆண்டுகளைக் குழந்தைகள் பள்ளியில் கழிக்கின்றன. ஒரு மனிதரின் வாழ்வின் பெரும் பகுதி என்பது மட்டுமல்ல, முக்கியமான காலகட்டமும் அதுவே என்பதை மறக்க வேண்டும். குட்டி இளவரசனிலேயே முடிக்கிறேன்...

"எனக்கு ஆறு வயதானபோது ஓர் அற்புதமான படத்தைக் கண்டேன். அது ஒரு காட்டு விலங்கை மலைப்பாம்பு ஒன்று விழுங்கிக் கொண்டிருப்பதைக் காட்டியது. அந்தப் படத்தைக் கண்டதும் அதை ஓவியமாக வரையாமலே என்னால் நானும் ஒரு சித்திரம் தீட்டினேன். என்னுடைய படத்தைப் பெரியவர்களிடம் காட்டியபோது அது ஒருவருக்கும் புரியவில்லை. அப்போதுதான் எனக்கு ஓர் உண்மை புரிந்தது. பெரியவர்கள் ஒருபோதும் எதையும் தாங்களாகவே புரிந்து கொள்வதில்லை. எப்போதும் ஓயாமல் விளக்கங்களைத் தருவது குழந்தைகளுக்கு சலிப்பைத் தருவதாக இருக்கிறது."

உண்மை கசக்கிறதா, பெரியோரே!

(இன்னும் பேசுவோம்..)



## வீழ்ச்சியில் இருந்து...(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

சேர்த்திருப்பதைச் சொல்லலாம். இடறி விழுந்து கிடக்கும் இலங்கை கிரிக்கெட்டை தூக்கி நிறுத்த பொருத்தமான நபர் இவர்தான் என்பது பலரது அபிப்பிராயமாக இருக்கின்றது. அதாவது இவர்களை வழிநடத்த நல்லதொரு மீட்பர் இவர்தான் என்பது பெரும்பான்மை யானவர்கள் கணிப்பு! இவரது கைகள் கட்டுப்படாமல், சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். காரணம் கிரிக்கெட் சபைக்கு இவர் சேவை அவசரமாகவும், அவசியமாகவும் தேவைப்படுகின்றது. முன்னைய காலங்களைப் போல, தம் கடிவாளங்களுக்குள் இவரும் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்டால், வெகு சீக்கிரம் வேறொரு புதுப் பயிற்சியாளரைத் தேட வேண்டி வரும்.

சரி இனிப் பிறந்துள்ள 2018, இலங்கை கிரிக்கெட் அணியை நாம் எந்தக் கோலத்தில் இனிக் காணப்போகின்றோம்? தமது திறமையை வெளிப்படுத்த பல வாய்ப்புகள் வருகின்றன. முதலில் வருவது பங்களாதேஷ் அணிக்கெதிரான தொடர். அடுத்து ஆசியக் கிண்ணதிற்கான மோதல். வருட நடுவில் கரபியன் தீவுகளுக்கான சுற்றுப் பயணம். அதற்கு முன்னர் தென் ஆபிரிக்க ,இங்கிலாந்து அணியினரின் இலங்கை விஜயம். டிசம்பரில் நியூசிலாந்திற்கான சுற்றுப்பயணம். இதெயெல்லாவற்றையும் விட, மாவட்டரீதியான போட்டிகளை நடாத்த சபை உறுதி அளித்துள்ளது. கடந்த இரு வருடங்களில் முதல் தர சுற்றுப்போட்டிகளை ஒழுங்குபடுத்த சபை தவறியது, மன்னிக்க முடியாத பெரிய குற்றம்.

ஏற்றங்களும் தாழ்வுகளும் கலந்ததுதான் வாழ்கை. மகாபொல்லாத 2017ஐ மறந்து விடுவோம். மறப்போம் மன்னிப்போம் என்றரீதியில், "பாவ மன்னிப்பைப்" பெறும் இலங்கை கிரிக்கெட் சபையின் புத்தாண்டு நடவடிக்கைகளும், அதன் விளைவாக சம்பவிக்கும் நிகழ்வுகளும், கிரிக்கெட் ரசிகர்கள் இழந்த குதூகலத்தையும், உற்சாகத்தையும் இந்த ஆண்டு மீட்டுத் தருமா?

## குரு(தி)ஷேத்திரம்...(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னரே உப - இயந்திரத் துப்பாக்கியை அங்கிருந்து கொண்டு செல்ல வேண்டும். இதற்குக் கணிசமான நேரம் செல்லும்.

பிடிபட்டவனால் அவ்வளவு நேரம் சித்திரவதைக்கள் தாக்கப்பிடிக்க முடியவில்லை. அவன் உப-இயந்திரத் துப்பாக்கியை எடுத்துத் தருவதாக ஒப்புக் கொண்டான். இந்திய இராணுவத்தினர் அந்த வீட்டை நோக்கி விரைந்தனர். அவர்களுடன் அந்தக் காலத்தில் குட்டிச் சண்டியர்களாக விளங்கிய இயக்கத் தலைவர்களும் வந்தனர்.

இந்திய இராணுவத்தினருடன் கைதான போராளியும் வருவதைக் கண்டவுடன் வீட்டுக்காரரப் பெண்மணிக்கு நிலைமையின் விபரீதம் புரிந்தது. ஆனாலும்,அவர் மனந்தளரவில்லை. தன்னைச் சுதாகரித்தக் கொண்டார்.'ஐயோ இவன் காவாலிய இஞ்சை ஏன் கூட்டிக்கொண்டு வாறிங்கள். இவன் என்ரை பிள்ளையளோடை சேட்டை விட்டு, அதுக்காக நான் இவனுக்கு விளக்கமாத்தால அடிக்கப் போனனான். அதுக்குப் பழி வாங்கத்தான் இஞ்சை உங்களைக் கூட்டிக் கொண்டு வாறான்!' என்று பெருஞ்சத்தமிட்டுச் சொன்னார்.

இந்திய இராணுவத்தினரும், கூட வந்த தமிழ் குழுவினரும், 'இவன் எல். ரீ.ரீ. தான்' என்று சொன்னார்கள். அதற்கு அவர், 'இவன் புலியமில்லை: பூனையுமில்லை - இவன் காவாலி! இவன் சொல்லுறதக் கேட்டு வந்திட்டீங்களோ?' பெருஞ் சத்தமிட்டு வாதாடினார். கைதான போராளியிடம் மீண்டும் விசாரித்தனர் அவர்கள். இங்கு உப-இயந்திரத் துப்பாக்கி இருக்கின்றதென்று வாதிட்டான். ஆனால், இவர் அதை மறுத்து வாதிட்ட விதம், அதுதான் உண்மையோ என்று கைதான போராளியையே சிந்திக்க வைத்தது. இந்திய இராணுவத்தினர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டனர். - இவன் அந்தக் குடும்பத்தைப் பழிவாங்க வேண்டுமென்றே தங்களைக் கூட்டிக்கொண்டு வந்திருப்பதாக.

தமிழ்க் குழு உறுப்பினர்களோ, இல்லை வீட்டைச் 'செக்' பண்ணித்தான் பாக்க வேணும்' என்று வாதிட்டனர். இந்த நிலைமையையும் தன்னால் சமாளிக்க முடியும் என உறுதிகொண்டார் அந்தப் பெண்மணி. வீட்டிலிருந்த பொருட்களை ஒவ்வொன்றாகத் தூக்கிப் போட்டார். ஒவ்வொன்றையும் போடும்போதும் 'இஞ்சை பாருங்கோ, இதோ துவக்கு?' என்று கோபத்துடன் கேட்டுக் கொண்டிருந்தார். கறாஜில் இருந்த பழைய இரும்புகள், மிதிவண்டிச் சில்லுகள் எல்லாவற்றையும் தூக்கித் தூக்கிப் போடும்போது இடையில் உப -இயந்திரத் துப்பாக்கி இருந்த உரப்பையையும் தூக்கினார். அதை மட்டும் காயம் வரக் கூடியதாகக் காலில் போட்டார்.ஆனால், அவர் எதிர்பாாத்ததைவிடப் பெரிய காயம் ஏற்பட்டுவிட்டது. அந்த நிலையிலும் தொடர்ந்து ஒவ்வொன்றாகத் தூக்கிப்போட்டுக் கொண்டு, கேட்டுக் கொண்டே இருந்தார்.

இப்போது இந்திய இராணுவத்தினர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டனர். - தாங்கள் தவறான தகவலின் அடிப் படையில்தான் இங்கே வந்ததாக, 'புத்திசாலித்தனமான ஒப்பந்தம்' மூலம் இந்த மண்ணில் காலடி எடுத்து வைத்த இந்தியப்படை, அந்த வீட்டை விட்டு அகன்றது. அந்தப் பெண்மணியின் காலில் ஏற்ப்பட்ட காயத்திலிருந்து வடிந்த குருதி எங்கள் பூமியை நனைத்தது. இது இந்த மண்ணின் விடுதலையைச் சத்தியம் செய்து கொண்டிருந்தது.

## யாழ்.நகரத்துப் பேய்கள்...(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

எதுவும் செய்யப்படவில்லை எனவும் அதன் காரணமாகவே பேய்கள் உலாவுகின்றன எனவும் அச்சத்துடன் இந்தத் தகவலைத் தெரிவிக்கின்றனர் அந்த வியாபாரிகள்.

இவ்விடயம் தொடர்பில் பலரும் பல கருத்துக்களைக் கூறுகின்ற போதும் இந்த 21 ஆம் நூற்றாண்டிலும் பேய்கள் உள்ளனவா என்று சிலர் கேள்வி எழுப்புகின்றனர்.குறித்த சிற்றங்காடியை அமைத்துக் கொடுத்த யாழ். மாநகரசபை நிர்வாகத்தைக் குற்றஞ் சாட்டியுள்ள வியாபாரிகள் தற்போது தாம் பரிகாரங்களைச் செய்யப்போவதாகத் தெரிவித்திருக்கின்றனர். ஆயினும் ஒன்பது பேர் அறந்துள்ளமை குறித்து அதற்குரிய சரியான காரணத்தை இன்னும் கண்டு பிடிக்க முடியவில்லை. விடயம் தொடர்பில் கொழும்பிலிருந்து வருகைதந்த அதிகாரிகள் குழுவொன்று நிை-லமையைப் பார்வையிட்ட தாகவும் தெரியவருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாகப் பேய்களைப் பிடிப்பதற்குப் பொலிஸாரும் அவ்விடத்திற்கு வந்திருந்தார்களாம். அதற்குப் பின்னரே விடயம் சற்று அடங்கிப்போயிருக்கிறது.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள ஊடக நிறுவனம் ஒன்றிலும் பேய்களின் நடமாட்டம் உள்ளன எனக் கூறும் அந்த நிறுவனத்தின் ஊழியர்கள் இரவில் பணியாற்றுவதற்கு அச்சம் தெரிவிக்கின்றனர். அதிலும் குறிப்பாகப் பெண் பேய்கள் நடமாடுவதாகவும் இரவில் அவை சிரித்துக் கதைப்பதாகவும், அங்குள்ளவர்களைப் பெயர் சொல்லிக் கூப்பிடுவதாகவும் கூறி சிலர் பணியாற்ற மறுத்துள்ளனர். அந்த நிறுவனம் அமைந்துள்ள இடம்பற்றிப் பலரும் பல கதைகளைக் கூறுகிறார்கள். இவ்வாறான நிலையில் அங்கு பணியாற்றும் ஊழியர்கள் பேய்ப் பீதியுடனே இரவுகளைக் கடத்துக்கின்றனராம்.

## ஆக்கிரமிக்கத் துடிக்கும்...(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதேபோன்ற கற்பனைக் கதை மகாவம்சத்தில் இடம்பிடிக்கும். சிங்கத்துக்கும் பெண்ணுக்கும் பிறந்தவர்களே சிங்களவர்கள் என்று மகாவம்சம் அவிழ்த்து விட்ட கற்பனைக் கதையைத் தானே இன்றும் நாம் படித்து வருகிறோம். கி.மு. 8 ஆம் நூற்றாண்டில் நடந்த கதை என கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாநாம தேரர் அவிழ்த்து விட்ட புழுகு மூட்டைகளைத்தானே இன்றும் படிக்கிறோம். அதைத்தானே இலங்கையின் வரலாறு என்றும் ஏற்றுக் கொள்கிறோம். கி.பி. 8 ஆம் நூற்றாண்டின் பின்னரும் எத்தனை இடைச் செருகல்கள் நம்வரலாற்றில் இடம்பெற்றிருக்கின்றன.

இலங்கை சிங்கள - பௌத்த பூமி என்பதை நிரூபிக்கும் விதத்தில் பல கற்பனைக் கற்பிதங்களும் கதைகளும் புதிய பொருள்கள் பல தொல் பொருள்களாவதும் காலதி காலமாக நடப்பதுதான். வன்னி இறுதிப் போர் நடந்து கொண்டிருக்கையிலேயே இராணுவம் கைப்பற்றிய ஒவ்வொரு இடங்களுக்கும் தேரர் ஒருவர் சென்று சிங்களப் பெயர் சூட்டியதுடன், அங்கு பழைமையான புத்தர் சிலைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் அரச தொலைக்காட்சிகளில் செய்திகள் தவறாது இடம்பெறும்.

திருகோணமலையின் பெரும் நிலப்பரப்பான சம்பூர் மீது கண் வைத்த அரசாங்கம் அதில் பெரும் பகுதியை அனல் மின் நிலையத்துக்கு பிடித்து விட்டது. இப்போது மீதமிருக்கும் தமிழர் நிலங்களை பௌத்த பிக்குகள் ஆக்கிரமிக்கத் திட்டமிட்டு விட்டார்கள். பழைமை வாய்ந்த முருகன் ஆலயம் அழிவை எதிர்பார்த்துக் காத்துநிற்கிறது. தமிழர் தலைநகரம் திருகோணமலை என்றோம். அங்கு இப்போது தமிழர் நிலை மூன்றாவது இடத்தில். தமிழர் பாரம்பரிய - புனித பிரதேசங்களான கந்தளாய், கன்னியா போன்றவை பௌத்த சிங்கள ஆதிக்கத்தின் கீழ் போய்விட்டன. இப்போது பேரினவாத முதலைகளான பௌத்த பிக்குகளின் வாயில் அகப்பட்டிருப்பது சம்பூர். விரைவில் அதுவும் அழிந்து விடும். விரட்டினர். மத்தளை மலை முருகன் ஆலயம் இருந்த பகுதியில் பௌத்த எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டது என்றும் அதனைத் தாம் சுவீகரிக்கப் போவதாகவும் தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது. இதனால் மேற்சொன்ன கற்பனைக் கதை போன்ற ஒன்றை அவர்கள் பரப்ப முனைவார்கள்.



# நடக்கப் போகிறார் நடராஜா



நவீன நகைச்சுவைத் தொடர் 30

– உமா சந்தோஷ்

எல்லோரும் அவரவர் அறையிலிருந்து வெளியே ஓடி வந்தனர். என்ன நடந்ததென்ற திகிலில் செய்வதறியாது திகைத்து நின்றனர். நடாவின் மனைவி இரத்த வெள்ளத்தில் சோபாவில் சாய்ந்தபடி கிடந்தாள். அவளைச் சுற்றிக் கண்ணாடித் துகள்கள் பரந்து கிடந்தன. போரின்போது செல் வீச்சுக்கு இலக்கான வீட்டின் ஒரு பகுதியைப்போலக் காணப்பட்டது நடாவின் வீடு. டொக்டர் மச்சாள் தான் ஓடிச் சென்று தனது சகோதரியான நடாவின் மனைவியின் மீதும் அண்மித்தும் இருந்த கண்ணாடித் துகள்களை அகற்றியபடி கட்டி அணைத்துத் தண்ணீர் பருக்க முனைந்தார். நீர் வாய்வழி உட்செல்லாது கரையாக வழிந்தோடியது. இது டொக்டர் மச்சாளுக்குச் சற்றுப் பயத்தைத் ஏற்ப்படுத்தியது. நடாவின் மகள் என்ன செய்வது என்று அறியாதவளாய் அங்குமிங்கும் ஒடியபடி இருந்தாள். நடா ஒருமுறை சத்தம் போட்டு அழுதுதீர்த்தார். பிந்ததினக் கொண்டாட்டத்திற்கென்று வந்து நின்ற வேலைக்காரார்கள் அங்கே வந்தபோது தான் மீட்புப் பணி தொடங்கியது. டொக்டர் மச்சாள் அம்புலன்ஸ/க்கப் போன் செய்யச் சொன்னாள். அம்புலன்ஸூம் அழைக்கப்பட்டது. அதற்கிடையில் நடாவின் மனைவியைச் சற்று தள்ளியிருந்த அறை ஒன்றிற்கு மாற்றினர். பெட்சீற் ஒன்றில் நடா மனைவியைத் தூக்கிக் கிடத்தினார்கள். அதற்கிடையில் அம்புலன்சும் வந்தபோது ஆஸ்பத்திரிப் பணியாளர்கள் வந்து நடா மனைவியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதற்குரிய ஆயத்தங்களைச் செய்தனர்.

கேவிக் கேவி அழுத நடாவின் அழுகை ஒலி சற்றுக் குறையத் திகைத்துப் போய் நின்று நடப்பவற்றை கண்காணித்துக் கொண்டிருந்தார். அந்தக் காட்சியைக் கண்டதும் அங்கு நின்ற ஒடிட்டர் மனைவி மயங்கிப்போனாள். ஏனெனில் சற்று முன்னர் அவள்தான் அந்த இடத்தில் நின்றபடி நடா மனைவியுடன் பேசிக் கொண்டிருந்தாள். தான் அதில் நின்றிருந்தால்... என்று எண்ணியதே அந்த மயக்கத்திற்குக் காரணம் என்று பின்னர் அறிந்தனர் அவர்கள். ஏறத்தாழ எல்லோருக்கும் நடந்தது என்ன என்று புரியவில்லை. அம்புலன்ஸில் வந்தவர்-தான் அங்கு என்ன நடந்திருக்கும் என்று ஊகித்திருந்தனர். புலன் விசாரணை நடத்தினர். அவர்கள்தான் நடாவின் மனைவிக்கு நடந்த விடயத்தை அறிந்து, விலாவாரியாக அங்கிருந்தவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தார்கள்..

நடாவீட்டு ஹோலில் மாட்டப்பட்டுத் தொங்கவிடப்பட்டிருந்த பெரிய ஆடம்பர விளக்கு பதினாறு செட்டைகளைக் கொண்டது. அது இரும்புச் சங்கிலி ஒன்றுடன் பிணைக்கப்பட்டிருந்தது. அந்தச் சங்கிலி கறள் ஏறி அறுந்து கீழே சோபாவிலிருந்து “ரப்” இல் படம் பார்த்துக் கொண்டிருந்த நடா மனைவியின் தலையைப் பதம்பார்த்துக் கொண்டது. தலை அடிபட்டிருந்ததுடன் விளக்கிலிருந்த பல்புகள் எல்லாம் உடைந்து நடா மனைவியின் உடலில் தைத்து விட்டன. அலங்கார விளக்கால் தலை அடிபட்டதே நடா மனைவி மயங்கியதற்கான காரணம் என்றும் அவர் சொல்லிக் கொண்டார்.

அம்புலன்ஸில் ஏறி நடா மகளும் தனது தாயாருடன் கூடப் போனாள்.தலையிலிருந்து வடிந்த வெள்ளம் நடா மனைவியின் உடலையும், சேலையையும் நனைத்திருந்தது. ஆரம்பத்திலிருந்த முனகலும் தற்போது இல்லை. ஆஸ்பத்திரியை அண்மித்ததும் அங்கிருந்த பணியாளர்கள் அனைவரும் உஷாரானார்கள். அம்புலன்ஸில் இறக்குவதற்கு முன்னர் அங்கிருந்த டொக்டர் வந்து பார்த்துவிட்டு அவசரப் பிரிவில் சேர்க்கச் சொன்னார். தனியார் ஆஸ்பத்திரி என்றபடியாலும், அதன் நிர்வாகத்தினர் நடாவைத் தெரிந்தவர்கள் என்றதாலும் அசுர வேகத்தில் அனைவரும் இயங்கினார்கள். ஆஸ்பத்திரி இயக்குனரும் அங்கே வந்திருந்தார். வேகம் இன்னும் அதிகமாகியது. முதலில் நடாவின் மனைவிக்கு முதலுதவி கொடுக்கப்பட்டுப் பின்னர் ஆடை மாற்றப்பட்டு அவசர அவசர மாக வைத்திய சிகிச்சை நடைபெற்றது.

மாலையானதும் மயக்கத்திலிருந்து விடுபடாத நடாவின் மனைவி ஐ.சீ.யூ க்கு மாற்றப்பட்டார். நடா வந்து பார்த்தார். இத்தனை வருட தாம்பத்தியத்தில் அவளை நடா இப்படிப் பார்த்தது கிடையாது. ஆடி அடங்கிப் போய் அவள் படுத்திருப்பதாகக் கண்டார். மிகவும் கவலையோடு அங்கிருந்த இருக்கை ஒன்றில் அமர்ந்து கொண்டார்.

பல பேர் நடா மனைவியைப் பார்க்க வந்து அது கை கூடாது போக அனைவரும் நடாவைத்தான் பார்த்துவிட்டுச் சென்றுவிட்டனர். நடா மகள் இன்னும் துக்கம் தாளாமல் அழுது கொண்டிருந்தாள். பலர் இந்த அனர்த்தத்தைக் கேட்டு விட்டு நேரில் வந்தனர். சிலர் தொலைபேசியில் தமது துக்கத்தைத் தெரிவித்துக் கொண்டனர்.

பல மணி நேர சிச்சை நடைபெற்றது.

இரவானதும் டொக்டர் மச்சாள் அங்கு தனது சகோதரிக்கு சிகிச்சை செய்கின்ற அனைத்து டொக்டர்மாருடனும் விலாவாரியாகப் பேசினாள். அவளும் டொக்டர் என்ற படியால் அவளுக்கு அனைத்து விபரங்களும் தரப்பட்டன. தற்போது நடா மனைவி இருக்கின்ற நிலையை மருத்துவ ரீதியாக விளக்கினர். நடா மனைவி மிகவும் அபாயகரமான நிலையில் இருப்பதாக மட்டும் அறிந்து கொண்டார்.

(தொடரும்)

## விடைகொடுக்க விரும்பாமல்...



தூக்கம்
விரோதித்துக் கொண்ட
நீண்ட இரவுகளில்
தூர நிலா
விளக்கெரிக்கும்
மடல் விர்ந்த கனவுத் தடாகத்தில்
நீ மட்டுமே தான்
நீந்திக்கொண்டிருக்கிறாய்.

பக்கச் சுவர்களில்
படர்ந்து கொண்டு
உயிருறிஞ்சிய
பாசிகளை உதிர்த்துக்
கொட்டிய பின்
தெளிந்த மனக் குளத்தில்
மண்டியிட்டுக் குனிகிறேன்
அது உன்னையே பிம்பிக்கிறது.

காலங்களை
காயங்களால் வரைந்திருந்த
காலங்களை
வெறுப்போடெறித்த
கறுத்தச் சாம்பலை
அதற்குள் தூவியகணமே
அவகாசமேதுமின்றி
கரைத்தழித்து
வெள்ளை மலர்களை
எம் மனங்களில்
பூக்கிறது காலம் .

நீயும் நானும்
தொலைத்து விட்டேங்கிய
அதிகாலை மணியோசை
இதய சுத்தியுடன்
விடியலை அர்ச்சிக்கும்
சுப்ரபாதம்
தூரத்திலெங்கோ
துல்லியமாய்க் கேட்க
அவசரமாய் விடைபெறுகிறது
அந்த அந்தகார இரவு.

நான்
கண்மடல்களை
இறுக மூடுகிறேன்
விடியல்களிலும் உனக்கு
விடைகொடுக்க விரும்பாமல்...

- மாலினி
03.01.18

## அழியா நினைவுகள்

வானளக்கும்
நீர்ப்பறவைகளின்
நினைவிறக்கைகளில்- அவை
வலசை போன காலத்தில்
தாகம் தணித்த
பாலைவன ஊற்றுக்கள்
பற்றிய நினைவுகளே
சமுத்திரங்களை விட
ஆழமாக எழுதப்பட்டிருக்கும்

.- மாலினி
27.12.12



# நீந்திக் கடந்த நெருப்பாறு 10

நன்றி தமிழ்லீடர் - அவுஸ்ரேலியா

"கணேஸ்.. என்ன சொன்னவர் எண்டு விளங்கினதே?" கணேஸ் சில விநாடிகள் அமைதியின் பின், "ஓ.. நல்லாய் விளங்கினது... அதை என்னட்ட நேரிலையும் கேட்டிருக்கிறான். ஆனால்.."

"ஆனால்...?"

"நான் அதை ஏற்றுக்கொள்ளேல்ல"! ரூபா "ஓமோம் நானும் ஏற்கேல்ல. அதைப் பற்றி யோசிக்கவே போறதில்லை. அப்பிடியான தேவையும் வராது" என்றாள்.

"நிச்சயமாய்.. அவனுக்கு எந்த ஆபத்துமே வராது", என்றான் சிவம். அவனின் குரலில் அசைக்க முடியாத உறுதி தொனித்தது. முன்னால் நின்ற பாலை மரத்தில் இரு குருவிகள் அருகருகே இருந்து தங்கள் மொழிகளில் பேசிக் கொண்டிருப்பது ரூபாவின் கண்களில்பட்டது. அவள் ஒரு பெருமூச்சுடன். "போராளிகளான எங்களுக்கு எப்பவும் சாவு வரலாம் எண்டு தெரிஞ்சு தான் காதலிக்கிறம் எண்டாலும் கூட..." எனக் கூறிவிட்டு இடைநிறுத்தினாள்.

"ஏன்.. இப்ப நீங்கள் சாவைக் கண்டு பயப்பிடுறியளே?"

"இல்லை.. இல்லை.. எனக்குச் சாவு வந்தால் அதைப் பெருமையோட ஏற்றுக்கொள்ளுவன். ஆனால் நான் காதலிக்கிறவருக்கும் சாவு வருமெண்டால்...", முடிக்கப்படாத அவளின் வார்த்தைகளில் ஒரு ஏக்கம் விரவிக்கிடந்தது.

சிவம் ஒரு பெருமூச்சுடன் சொன்னான், "அவனுக்கு ஏதாவது விபரீதமாய் நடந்தால் என்னாலேயே தாங்க முடியாது.. அப்பிடியிருக்க உங்கடை நிலைமை எப்பிடி இருக்கும் எண்டு என்னால புரிஞ்சுகொள்ள முடியுது"

"இல்லை. அவர் ஒரு வீரன்.. மரணம் அவரை வெற்றி கொள்ள முடியாது" என்றாள் ரூபா அழுத்தமான குரலில்.

"ஓமோம்.. அவன்ரை மன உறுதி அசைக்கப்பட முடியாதது", என்றான் கணேஸ். அவர்கள் கதைத்துக்கொண்டிருந்த அந்த நேரத்தில் திடீரென மருத்துவப்பிரிவு முகாம் பரபரப்படைந்தது. சில போராளிகள் அங்குமிங்கும் ஓடி ஏதோ அவசர பணிகளில் ஈடபடத் தொடங்கினர்.

அம்புலன்ஸ் வண்டியொன்று அவசரமாக புறப்பட்டு வேகமாக வெளியே சென்றது. அப்போது அங்கு வந்த நிமலனிடம்,

"என்ன நிமலன் ஏதும் பிரச்சினையே?", எனக் கேட்டான்.

"ஓமண்ணை.. கிளைமோர் வைச்சிட்டாங்களாம். மோட்டார் சைக்கிளில வந்த ஒரு ரீச்சரும், புருஷனும் அகப்பட்டிட்டினமாம்"

"எங்கை எங்கை நடந்தது?" எனத் தவிப்புடன் கேட்டான் சிவம்.

"பரப்புக்கடந்தான் றோட்டிலையாம்" சிங்கள இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையணி மடு - பரப்புக் கடந்தான் வீதியில் கிளைமோர் வைத்ததென்றால் தங்கள் பாதுகாப்பு நடவடிக்கைகளில் பலவீனப்பட்டிருப்பதாகவே சிவத்துக்குத் தோன்றியது. அது அவனுள் ஒருவித கோபத்தையும் ஏற்படுத்தியது.

"அவனவு தூரம் அவங்கள் வரும் வரைக்கும் எங்கட முறியடிப்பு ரீம் என்ன செய்ததாம்?"

"அண்ணை.. இந்த மடுக்காடு அவங்களுக்கு நல்ல வசதிதானே.. வில்பத்து வரையும் நீளுது. எங்கடை போராளியளின்ரை கண்ணில மண்ணைத் தூவிப்போட்டு வாறது அவனுக்கு அவ்வளவு கஷ்டமில்லை என்றான் நிமலன் சற்று அமைதியாக. சிவமும் அதை ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

"எங்களோட நிண்டிட்டு துரோகியளாய் மாறின கொஞ்சப் பேரும் இப்ப அவங்களோட நிக்கிறாங்கள்.. அவங்கள் வடிவாய் பாதை காட்டுவாங்கள்தானே?"

"அந்தத் துரோகியள் மட்டும் என்ரை கையில அகப்பட்டால்..." என்றுவிட்டு பல்லை நெருமினான் நிமலன்.

"சரி.. சரி.. ஆக்கள் பாடு என்னமாதிரி?"

"கிளைமோர் எண்டால் தெரியும்தானே.. இப்ப விபரம் தெரியேல்ல.. 'மெடிக்கல் ரீமை' அனுப்பீட்டன். இனி வந்திடும்", என்றான் நிமலன்.

"சரி சரி.. நான் 'பேசு'க்குப் போறன்"

"ஓம்.. சிவம். நீங்கள் போங்கோ.. நான் இஞ்சை தான் நிப்பன்." என்றாள் ரூபா.

"கணேஸ் தேடுவான்.. பக்கத்திலேயே நில்லுங்கோ.." என்றுவிட்டு ரூபாவிடம் விடைபெற்றான் சிவம். சிவம் தங்கள் முகாமைச் சென்றடைந்ததும் முழு விபரங்களையும் அறிய முடிந்தது. ஆசிரியையும், அவரின் கணவரும் மோட்டார் சைக்கிளில் அடம்பனில் இருந்து மடு நோக்கி வந்ததாகவும், பரப்புக் கடந்தானுக்கும் மடுவுக்கும் இடையிலான அடர்ந்த காட்டுப் பகுதி வீதியில் கிளைமோர் தாக்குதலில் அகப்பட்டதாகவும் தெரிந்து கொண்டான். ஆசிரியை சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். அவரின் கணவர் படுகாயமடைந்து மருத்துவமனைக்கு கொண்டுவரப்படும் போது மரணமடைந்து விட்டார்.

நேராகத் தளபதியிடம் சென்ற அவன், அவர் 'வோக்கி'யில் யாருடனோ கதைப்பதைக் கண்டு வெளியே நின்று கொண்டான். சிறிது நேரத்தில் அவர், "சிவம், உள்ளை வாங்கோ" என அழைத்தார்.

– நா. யோகேந்திரநாதன் –



சிவம், "என்னண்ணை சனத்தைக் கொல்லுறாங்கள்", என்றான். அவன் வார்த்தைகளில் ஒருவித ஆவேசம் இழையோடியது.

"ம்.. எங்கட வாகனங்களுக்கு வைச்சாங்கள். புதூருக்கை வைச்சு இரண்டு பேரை அமத்தினதோட ஓய்ஞ்சு கிடந்தது. இப்ப பிறகு சனத்திலை துவங்கீட்டாங்கள்", என்றார் தளபதி.

"நாங்கள் ஏதாவது அடுத்த ஏற்பாடு செய்யத்தானே வேணும்.."

"பின்னை.. இவங்கள் எங்கடை சனத்தை அழிக்க விடலாமே?"

"அப்ப.. என்ன செய்வம்?"

"பிளான் ஒண்டு போட்டிருக்கிறன். இரவைக்கு அண்ணையோட கதைச்சு அனுமதி எடுத்துப் போட்டு நடத்திவிட வேண்டியதுதான்"

அவரின் வார்த்தைகள் தனக்கொரு பெரிய வேட்டைக்கு வாய்ப்புக் கிடைக்கும் என்ற நம்பிக்கையை சிவத்துக்கு ஏற்படுத்தியது.

ஆசிரியையும் அவரின் கணவரும் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட செய்தி பாலம்பிட்டி, மடு, பண்டிவிரிச்சான் என எல்லாக் கிராமங்களிலும் பரவிவிட்டது. எங்கும் ஓர் அச்சம் கலந்த பரபரப்பே நிலவியது. அன்று பரமசிவம் நேரத்துக்கே மாடுகளை சாய்த்துக்கொண்டு வந்து பட்டியில் அடைத்துவிட்டு முற்றத்துக்கு வந்தபோது, சுந்தரசிவம் அங்கு காணப்படாததால் அவன் எங்கு போயிருப்பான் என்ற கேள்வி அவருக்கு எழுந்தது.

"இஞ்சரப்பா, உவன் தம்பி எங்கை போட்டான்?" எனப் பலமாகக் கேட்டார்.

அடுக்களைக்குள்ளிருந்த பார்வதி, "காலமை பெருமாளைக் கொண்டு போய் பண்டிவிரிச்சானிலை விட்டவனல்லே ஏத்திவரப்போட்டான்", என்றாள்.

"சரி, சரி.. பொடியளோட சேர்ந்து அவனை கண்டபடி திரிய வேண்டாமெண்டு சொல்லு... மோட்டச்சைக்கிளுக்கே குண்டு வைக்கிறாங்கள்... நம்பேலாது.. இனி சைக்கிளுக்கும் வைப்பங்கள்" என்றார்.

"பாழ்படுவார்.. வாத்தியார் பெட்டையும் புருஷனும் அவங்கள என்ன கேட்டதுகளாம்? கொண்டுவாற குண்டு வெடிச்சுத்தான் உவங்கள் தூலைவாங்கள்" என வாய் நிறையச் சாபம் போட்டாள் பார்வதி.

"ம்.. நக்கிற நாய்க்கு செக்கென்ன சிவலிங்கமென்ன.. இரவு ரேடியோவில இரண்டு பெரிய புலியளைக் கொன்று போட்டம் எண்டு செய்தி சொல்லுவாங்கள்"

(நெருப்பாற்றில் நீந்துவோம்...)

# குரு(தி)ஷேத்திரம் II

- கரும்பறவை -

ஆனி, ஆடி, ஆவணி 1992 சிரித்திரன் இதழில் கரும்பறவை என்பவரால் எழுதப்பட்ட கட்டுரை இது. ஜவான் என்று அறியப்பட்ட போராளி (பின்னாளில் புலிகளின் குரல் வானொலியின் பொறுப்பாளர்) கொடுத்த தகவலின்படி இந்த வரலாற்றுப் பதிவு வெளிவந்திருந்தது.



15.12.1988 அன்று திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வரவிருந்தார். 19.12.1988 இல் நடைபெறவிருந்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் இவர் தமிழ் மக்களுக்கு வாக்குறுதிகள் வழங்குவதற்காக பண்டத்தரிப்பு -பனிப்புலத்தில் ஒரு தேர்தற் பிரசாரக் கூட்டமொன்றை ஒழுங்கு செய்திருந்தார். தமிழ் மக்கள் ஞாபக மறதிக்காரர்கள் என்று அவர் நூற்றுக்கு நூறு வீதம் நம்பியதாலேயே இவ்வாறான வாக்குறுதி வழங்கும் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார். யாழ்பாணத்திற்கு வருகைதரும், தென்னிலங்கை அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு நாமம் போட்டபின் நல்லூர் கந்தன் ஆலயத்திற்கு வருகை தந்து பொட்டுப் பொடுவது, ஒரு அரசியல் சம்பிரதாயமாகும். அந்த வகையில் இவரும் நல்லூருக்கு வருகை தர இருந்தார். இவரது பாதுகாப்புக்காக அன்று அதிகாலையிலிருந்தே நல்லூர் பகுதியெங்கும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. வீதியெங்கும் ஹிந்தி மொழி கேட்டுக் கொண்டிருந்தது.

"முந்து தமிழ் மொழி நொந்து
வதைபட ஹிந்தி வலம்வரவோ
நிந்தை உடன் உயிர் தந்து புகழ்பெற
வந்து களம் புகுவாய்"

1982ஆம் ஆண்டு வெளிவந்த "காசி ஆனந்தனின் கவிதை வரிகள் இவை. எத்தனையோ ஆண்டுகளக்கு முன்னால் கவிஞர் காசி ஆனந்தன் எழுதிய கவிதை, 1987ம் ஆண்டு நிதர்சனமாகியது. இந்தி வலம்வந்துகொண்டிருந்தது. எம் மண்ணில் தமிழ் மொழியும் தமிழர்களும் இந்தியர்களிடம் வதைபட்டுக் கொண்டிருந்த காலம் அது. நாங்கள் எந்த நாட்டுச் சட்டத்தின் கீழ் ஆளப்படுகின்றோம் என்று புரியாத நிலையில் , உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்தனர் எம் மக்கள். அந்தக் காலத்தில்தான், சிங்களத்தை அரசகரும மொழியாகக் கொண்டு ஆட்சி செய்யப்போகும், ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்காக நடக்கும் தேர்தலுக்கு வடக்கு - கிழக்கில் இந்திக்காரர்கள் பாதுகாப்பு வழங்கிக் கொண்டிருந்தனர். அவ்வாறான தேர்தல் நடவடிக்கையின்போதே , நல்லூர்ப் பகுதியில் இவ்வாறு பாதுகாப்பு பலப்படுத்தப் பட்டிருந்தது.

சில போராளிகள் முற்றுகைக்குள்ளான பகுதிக்குள் அகப்பட்டு விட்டார்கள். ஒரு நாட்டுப் பற்றாளரின் வீட்டில் இரவு தங்கச சென்றபோதே இச் சம்பவம் நிகழ்ந்தது. அதனால் அதிகாலை நான்கு மணிக்கே வீட்டின் கூரையை அண்டிய பகுதிக்குள் (சீற்றுக்குள்) போய்விட்டார்கள் போராளிகள். சாதாரணமான முறையில் பார்த்தால் இப்பகுதிக்குள் செல்வதற்கு வழியில்லைப் போல் தோன்றும். ஆனால் வீட்டின் நடுப்பகுதியில் இதற்காக ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அவ்வழியாகவே போராளிகள் உள்ளே சென்றனர். பொதுவாகவே இந்த நேரம் அவர்கள் இரவில் தங்குமிடங்களை விட்டுப் போவதற்கு பொருத்தமான நேரம். இரவில் நேரஞ் செல்லவந்து படுத்து, அதிகாலையில் நேரத்துடன் புறப்படுவதே அவர்கள் வழக்கம். புறப்படும் நோக்கத்துடன் இயற்கைக் கடன்களைக் கழிப்பதற்குத் தயாராகும் வேளையில், இப்பகுதி முற்றுகையிடப்பட்டது.

வெளியே இராணுவ முற்றுகை- உள்ளே இயற்கை உபாதை. வெளியில் செல்ல முடியாத வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தனர் போராளிகள். எந்த நேரமும் இராணவம் வீட்டினுள் நுழையலாம். வாயில் சயனைற் குப்பி-கையில் துப்பாக்கி. அந்த வழி திறக்கப்பட்டால் முதலில் புகும் இந்திய இராணுவ வீரனின் சாவுக்கு உத்தரவாதம் வழங்க முடியும். ஒவ்வொரு வினாடியும் யுகங்களாகக் கழிந்தன. எல்லோரும் அந்த வழியையே நோக்கிக் கொண்டிருந்தனர். அந்த வழியும் மெல்லத் திறந்தது. எல்லோரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர். இதுதான் எமது இறுதி நொடிப்பொழுது என்பதுதான் அந்தப் பார்வையின் அர்த்தம் எதிர்பார்த்தபடி அந்த வழியைத் திறந்தது இந்திய இராணுவத்தினரல்ல. அந்த வீட்டுச் சொந்தக்காரர்கள்தான். வீட்டில் போராளிகள் தங்க இடம்பொடுப்பது, சாப்பாடு கொடுப்பது எல்லாம் இந்தியாவின் பாதுகாப்புக்கு பங்கம் விளைவிக்கும் செயல்களாகக் கருதப்பட்டுத் தாம் சித்திரவதைக்கு உள்ளாக நேரிடும், சில வேளை சாவுகூட சம்பவிக்கலாமெனச் சந்தேகமறத் தெரிந்திருந்தும், அந்த நிலையை ஏற்றுக் கொள்ள சித்தமாயிருந்த நாட்டுப்பற்றாளர்கள் அவர்கள் கதவைத் திறந்ததும் கதவைத் திறந்ததும்" இந்தாங்கோ தோசை சாப்பிடுங்கோ" என்றனர்.


ஆத்திரமும் மகிழ்ச்சியும் கலந்த நிலை போராளிகளுக்கு. "இந்த நேரத்தில் இதோ வேலை?" என்ற அன்புடன் கடிந்து கொண்டனர். வழி மூடப்பட்டது. எப்படியோ இயற்கை உபாதைக்கு வழி தேடிவிட்டனர். பசியும் முடிந்தது. முடிந்தது. மீண்டும் வழி திறக்கப் பட்டது. இப்பொழுது கிடைத்தது தண்ணீர். மீண்டும் அன்புடன் கடிந்து கொண்டனர். அன்று பகல் முழுக்க இதே நிலையிலேயே போராளிகள் இருக்க வேண்டியிருந்தது. தம்மைப் பற்றியல்லாது போராளிகளுக்காகப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தது அந்த நாட்டுப்பற்றாளர் குடும்பம்.

முடிவில் எதிர்பார்க்கப் பட்ட விபரீதம் நிகழாமற் போனது குறித்து அனைவரும் "அப்பாடா: என்று பெருமூச்சு விட்டனர். விரைவிலேயே இன்னொரு சோதனையும் ஏற்பட்டது அந்தக் குடும்பத்தினருக்கு!

"அன்ரி -இது கிடக்கட்டும். பிறகு வந்து எடுக்கிறம்"என்று சொல்லிவிட்டு ஒரு இயந்திரத் துப்பாக்கியை கொடுத்துவிட்டு சென்றார்கள் இரு போராளிகள். வீட்டுக்காரப் பெண்மணியும் அதை வாங்கி ஒரு உரப்பைக்குள் வைத்து, வீட்டில் பழைய பொருட்கள் கிடக்கும் கராஜ் ஒன்றினுள் வைத்துவிட்டார். இவர் இதை வைத்ததை பிள்ளைகள்கூட காணவில்லை. உப-இயந்திரத் துப்பாக்கியைக் கொடுத்துவிட்டு மிதிவண்டியில் சென்று கொண்டிருந்தனர் அவ்விரு போராளிகளும். அதிக தூரம் சென்றிருக்க மாட்டார்கள்.

இவர்களைத் தேடிக் கொண்டிருந்த இந்திய இராணுவத்தினர் வழியில் இவர்களை எதிர்கொண்டனர். வழக்கம்போல மிதிவண்டியை நிலத்தில் போட்டுவிட்டு ஓடினார்கள். மூச்சிரைக்க ஓடியபோதும் அவர்களில் ஒருவன் இந்திய இராணுவத்திடம் பிடிபட்டு விட்டான். மற்றவன் தப்பிவிட்டான். தப்பியவன் மீண்டும் அந்த இடத்திற்கு வருவதென்றால் இலகுவான காரியமல்ல. முதலில் பாதுகாப்பான இடத்தைச் சென்றடைய வேண்டும். பின்னர் அப்பகுதிக்குள் பிரச்சினை இல்லை என்று உறுதிப்படுத்த வேண்டும்.

( 18 ஆம் பக்கம் பார்க்க)



'ஆன்மிக அரசியலை அனைவரும் சேர்ந்து முன்னெடுப்போம்' என்று கூறி தன் அரசியல் பிரவேசத்தை சில நாட்களுக்கு முன்னர் ஆரம்பித்தார் நடிகர் ரஜினிகாந்த். இது குறித்து பல்வேறு அரசியல் தலைவர்களும் தொடர்ந்து கருத்துகள் கூறி வரும் நிலையில், 'ஆன்மிக அரசியல் என்றால் என்ன?' என்ற கேள்விக்கு ரஜினி விளக்கமளித்துள்ளார்.


சென்னைக் கோடம்பாக்கத்தில் உள்ள ராகவேந்திரா மண்டபத்தில் ரசிகர்கள் மத்தியில் கடந்த 31ஆம் திகதி பேசிய நடிகர் ரஜினிகாந்த், 'அரசியலுக்கு வருவது உறுதி. வரும் சட்டமன்றத் தேர்தலில் தனிக்கட்சி தொடங்கி 234 தொகுதிகளிலும் போட்டியிடுவோம். ஆன்மிக அரசியலை முன்னெடுப்போம்' என்று அறிவித்தார். ரஜினியின் அரசியல் பிரவேசம் தேசிய அளவில் பேசுபொருளாக மாறியிருக்கிறது. சினிமா நட்சத்திரங்கள், அரசியல் பிரபலங்கள் எனப் பல்வேறு தரப்பினரும் ரஜினிக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தனர். மறுபுறம் விமர்சனங்களும் குவிந்தன.

இப்படிப்பட்ட சூழலில் 'ஆன்மிக அரசியல் என்றால் என்ன?' என்ற கேள்விக்கு 'உண்மையான, நேர்மையான, நாணயமான, ஜாதி, மதச் சார்பற்ற அரசியலே ஆன்மிக அரசியல். அறவழி அரசியலே ஆன்மிக அரசியல். எனது கட்சியின் சின்னம், பெயர் போன்றவை போகப் போகத் தெரியும்' என்று விளக்கமளித்துள்ளார் ரஜினி.

பேச்சு எழுந்ததையடுத்து, பாபா முத்திரையில் இருந்த தாமரை மலர் படத்தை நடிகர் ரஜினிகாந்த் அதிரடியாக நீக்கியுள்ளார். ரஜினியின் அரசியல் கட்சி சின்னமாக பாபா முத்திரை தேர்வுசெய்யப்படலாம் என்கிற எதிர்பார்ப்பு நிலவுகிறது. ஆள்காட்டிவிரலையும் சுண்டுவிரலையும் உயர்த்தி, மற்ற விரல்களை மடக்கி வைத்திருப்பதே பாபா முத்திரை ஆகும். ஆன்மிக அரசியல் செய்யப்போவதாக ரஜினிகாந்த் கூறியிருக்கும் நிலையில், பாபா சின்னத்தைப் பலர் சமூக வலைதளங்களில் விமர்சித்தனர். பாபா முத்திரையில் தாமரை மலர் இடம் பெற்றிருந்ததே இதற்குக் தற்போது, கை மட்டுமே அதில் காணப்படுகிறது. அதன் கீழ் உண்மை, உழைப்பு, உயர்வு என்கிற வாசகங்கள் புதிதாக இடம்பெற்றுள்ளன. தேர்தல் நேரத்தில் பாபா முத்திரையில் தாமரை இடம்பெற்றால், தன் கட்சியின் சின்னத்துக்கு பாதிப்பு வந்துவிடக் கூடாது என்று ஆலோசித்தே ரஜினிகாந்த் இந்த முடிவை எடுத்துள்ளார்.

ரஜினிகாந்த், தன் ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட வீடியோவில் பாபா சின்னம் இடம்பெற்றிருந்தது. அதில், தாமரைக்குப் பதிலாக பாபா முத்திரையைச் சுற்றி பாம்பு உருவம் இடம்பெற்றிருந்தது. கொல்கத்தா ராமகிருஷ்ணா பக்கத்தில் வெளியிட்ட வீடியோவில், 'அனைவருக்கும் வணக்கம். அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகள். என்னுடைய அரசியல் பிரவேசத்தை வரவேற்ற அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு முக்கிய அறிவிப்பு. எனது பதிவுசெய்யப்பட்ட ரசிகர் மன்றத்தின் உறுப்பினர்களும், பதிவு செய்யப்படாத மன்றத்தின் உறுப்பினர்களும் மற்றும் தமிழ்நாட்டில் ஒரு நல்ல அரசியல் மாற்றத்தைக் கொண்டுவர வேண்டும் என்று நினைக்கும் மக்களை ஒருங்கிணைத்து ஒரு குடையின் கீழ் கொண்டுவரும்பொருட்டு சயதஜைஅயுளெசயஅ.ழசப என்ற இணையதளத்தை

# ஆன்மீக அரசியலா... ஆ...!?



பின்னர் சென்னையில் இருக்கும் தனியார் விடுதியில் தனது ரசிகர்கள் மத்தியில் பேசிய ரஜினி,'ஹகட்சி கொடி தயாரிக்கும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. கட்சிக் கொடியை அறிமுகம் செய்யும் போது பத்திரிகையாளர் சந்திப்பும் இருக்கும்' என்று தகவல் தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சி உருவெடுக்கும் என்ற காரணம். பாரதிய ஜனதா கட்சியின் மறைமுக ஆசியினால்தான், நடிகர் ரஜினிகாந்த் அரசியலுக்குள் நுழைவதாக சொல்லப்படும் நிலையில், பாபா சின்னத்தில் தாமரை இடம் பெற்றிருப்பதும் விமர்சனத்திற்குள்ளானது.

இதையடுத்து, பாபா முத்திரையில் இருந்த தாமரையை நடிகர் ரஜினிகாந்த் நீக்கியுள்ளார். மடத்தின் சின்னத்தில், சூரியன் உதிக்கும் பின்னணியில் குளம், தாமரை மற்றும் அன்னப்பறவை இடம்பெற்றிருக்கும். அதைச் சுற்றி பாம்பு படமெடுத்து நிற்பது போன்று அந்தச் சின்னம் காணப்படும். அந்தச் சின்னத்தைப் போலவே, நடிகர் ரஜினிகாந்த் பாபா முத்திரையை மாற்றியுள்ளார்.

அவரது அதிகாரபூர்வ ட்விட்டர் உருவாக்கியிருக்கிறேன். அதில், உங்கள் பெயர் மற்றும் வாக்காளர் அடையாள எண்ணைப் பதிவுசெய்து, உறுப்பினர் ஆகுங்கள். தமிழ்நாட்டில் ஒரு நல்ல அரசியல் மாற்றத்தைக் கொண்டுவருவோம். வாழ்க தமிழக மக்கள். வளர்க தமிழ்நாடு' என்று தெரிவித்துள்ளார்.





சமூகப் பிரச்சினைகள் குறித்து வலைத்தளங்களில் பதிவிடும் நடிகைகளை சிலர் வம்புக்கிழுத்து அவதூறு பரப்பி வருகின்றனர்.

இவ்வாறான வம்பாளர்களை கைது செய்ய தனிப்படை அமைக்கப்பட்டுள்ளது. அதில் முறையிட்டால் நடிகைகளுக்கு எதிராக வம்பு, வதந்தி பரப்புவோரை இந்தப் பிரிவு கைது செய்யும்.

டாப்ஸியும் இந்த வம்பாளர்களால் பெரிதும் பாதிக்கப்பட்டவர். இதனால் அவர் தனக்கு ஏற்பட்ட சிக்கல் குறித்து முறைப்பாடு செய்யவுள்ளாராம்.



ஸ்ருதி ஹாசன் தந்தையின் பாணியில் மதம், சாதிகளைக் கடந்தவர் என்ற பேச்சு திரை வட்டாரத்தில் உள்ளது.

இதை உறுதிப்படுத்துவதாக லண்டன் நடிகரான மைக்கல் கோர்சலை காதலித்து வருகிறார்.

நடிகைகளைப் போன்றே முதலில் மறுத்தவர் இப்போது மைக்கலுடன் கிறிஸ்மஸ் கொண்டாடிய படத்தை வெளியிட்டார். முன்னதாக தமிழ் பாரம்பரிய உடையுடன் மைக்கல் - ஸ்ருதி ஜோடியின் படம் வைரலாகி இருந்தது.

இருவரும் திருமணம் செய்வார்களா? அல்லது லிவிங் டு கெதர் பாணியில் வாழ்வார்களா? என்பது குறித்தே அதிகம் பேச்சடிபடுகிறது. இதனிடையே ஸ்ருதி படங்களில் நடிக்க அண்மைக்காலமாக மறுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



பொலிவுட் சுப்பர் ஸ்டார் ஷாருக் கான் குள்ள மனிதராக நடிக்கும் படத்திற்கு "ஜீரோ" (பூச்சியம்) எனப் பெயரிட்டுள்ளார்கள்.

ஆனந்த் எல். ராய் இயக்கும் இந்தப் படத்தில் அவருக்கு ஜோடியாக அனுஷ்கா சர்மா, கத்ரீனா கைப் நடிக்கவுள்ளனர்.

ஷாருக் கானின் குள்ளத் தோற்றம் கிராபிக்ஸில் உருவாக்கப்பட்டுள்ளது. விரைவில் இப்படம் வெளிவரவுள்ளது.

தனுஷ் நடிக்கும் மாரி 2 படத்தின் வில்லியாக நடிக்கவுள்ளார் வரலக்ஷ்மி சரத்குமார்.

மாரி 2 படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகியுள்ளது. தமிழ், தெலுங்கு என இரு மொழிகளில் உருவாகும் இந்தப் படத்தை பாலாஜி மோகன் இயக்குகிறார்.

# வென்றாலும் ஆச்சரியமில்லை




2017ஆம் ஆண்டு அதிக கோல்கள் அடித்த சாதனையைப் படைத்திருக்கின் றார் இங்கிலாந்து அணியின் வீரரும், பிறீமியர் லீக் போட்டியில் ரொற்றின்காம் ஹெட்ஸ்பர் அணியின் வீரருமான ஹரி கேன். கடந்தவாரம் சவுதாம்ரன் அணியுடனான போட்டியில் ரொற்றின்காம் அணி 5 : 2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இதில் ஹரி கேன் ஹற்றிக் கோல் அடித்ததால் அவரின் கோல்களின் எண்ணிக்கை 56 ஆக உயர்வடைந்துள்ளது. 2017இல் அவர் அடித்த எட்டாவது ஹற்றிக் கோல் இதுவாகும்.

அத்தோடு இதன் மூலம் பிறீமியர் லீக் போட்டிகளில் ஒரு வருடத்தில் அதிக கோல்கள் அடித்த வீரர் என்ற இன்னொரு சாதனையையும் ஹரி கேன் படைத்துள்ளார். இதற்கு முன்னதாக 1995 ஆம் ஆண்டு பிறீமியர் லீக் போட்டிகளில் பிளைக்பேர்ண் றோவர்ஸ் அணி வீரரான அலன் சியரெர் அதிக பட்சமாக 36 கோல்கள் அடித்ததே சாதனையாக இருந்தது. இதனையே 2017இல் 39 கோல்கள் அடித்து ஹரி கேன் முறியடித்துள்ளார்.

மூன்று வாரங்களுக்கு முன்னர் தான் இதே பக்கத்தில் கடந்த வருடம் றொனால்டோவுக்கு தங்கப்பந்து விருது கிடைத்ததையிட்டு ' எதிர்காலமும் சவாலே' என்றதொரு கட்டுரை எழுதியிருந்தோம். அதில் பி.பி.ஸி யைச் சேர்ந்த உதைபந்தாட்ட ஆய்வாளர்கள் மெஸ்ஸி, றொனால்டோவுக்குப் பின்னர் தங்கப்பந்து விருதை எதிர்காலத் தில் யார் பெறுவார்கள் என்றதொரு ஆய்வை நடத்தியதையும் அதில் நெய்மருக்குப் போட்டியாக ஹரி கேன், செல்சியின் ஈடன் ஹசாட், லிவர்பூலின் பிலிப் கோடின்கோ போன்றவர்கள் விளங்குவார்கள் எனவும் குறிப்பிட்டிருந்தோம்.

ஆனால் தற்போது 24 வயதான ஹரி கேன், மெஸ்ஸியை விட அதிக கோல்கள் அடித்ததைப் பார்க்கும் பொழுது மெஸ்ஸி, றொனால்டோ விளையாடும் பொழுதே அடுத்தடுத்த வருடங்களில் அவர் தங்கப்பந்து விருதைப் பெற்றாலும் ஆச்சரிய மில்லை என்றே தோன்றுகிறது. ஆனாலும் பிறீமியர் லீக் போட்டிகளி லும் ஐரோப்பிய சம்பியன்லீக் போட்டிகளிலும் ரொற்றின்காம் பெறும் சம்பியன் பட்டமும் 2018 உலகக் கிண்ணப் போட்டிகள் மற்றும் 2020 யூரோ கிண்ணப் போட்டிகளில் இங்கிலாந்தின் பெறுபேறுகளும் இவற்றில் தாக்கத்தைச் செலுத்தும் என்பதனால் அவற்றின் வெற்றி தோல்வியே ஹரி கேனுக்கான தங்கப்பந்து விருதைத் தீர்மானிக்கும் முக்கிய அம்சமாக விளங்கப்போகின்றன எனலாம்.

# அதிர்ச்சித் தருணங்கள்

விளையாட்டில் வெற்றி தோல்விகள் சகஜம் என்றாலும் விடைபெற்றுச் சென்ற 2017 ஆம் ஆண்டு சில அதிர்ச்சியான தருணங்களையும் மறக்க முடியாமல் ஏற்படுத்திச் சென்றுள்ளது.

1. லண்டனில் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் தடகளத் தொடரின் 100 மீற்றர் ஓட்டப் போட்டியோடு தான் ஓய்வு பெறப்போவதாக ஜமைக்காவின் மின்னல் வீரரான உசைன் போல்ட் அறிவித்தமையால் அந்தப்போட்டி ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது. இறுதிப்போட்டியி லும் உசைன் போல்ட் வெற்றி பெற்று தங்க மகனாகவே விடை பெறுவார் என்ற அவர்களது நம்பிக்கையை அமெரிக்க வீரரான ஜஸ்ரின் ஹட்லின், உசைன் போல்டை தோற்கடித்து தங்கப்பதக்கம் வென்றதன் மூலம் சிதறடித்தார்.

2. 1934, 1938, 1982, 2006 ஆம் ஆண்டு உதைபந்தாட்ட உலகக் கிண்ணங்களை வென்ற இத்தாலி அணி 60 வருடங்களின் பின்னர் 2018 உலகக் கிண்ணப் போட்டிகளுக்குத் தகுதி பெறாமல் வெளியேறியது. இதனால் மன உளைச்சலுக்கு ஆளான இத்தாலி அணித்தலைவரும் கோல்காப்பாளரு மான ஜியானுலிகி பபுன் சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவதாக உடனடியாகவே அறிவித்திருந்தார்.

3. அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 8 வார கர்ப்பத்தோடு இந்த வருடம் நடைபெற்ற அவுஸ்ரேலிய ஓப்பன் தொடரில் விளையாடி கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றமை போட்டி முடிந்த பின்னர் தெரியவந்தது. இதன்மூலம் முக்கியமான போட்டியில் கர்ப்பத்தோடு விளையாடிய முதல் வீராங்கனை என்ற பெயரையும் பெற்றுக்கொண்டார்.

4. சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டத் தொடரில் பார்சிலோனா பி.எஸ்.ஜி அணிகளுக்கிடையிலான




பிரான்சில் நடைபெற்ற முதலாவது காலிறுதி ஆட்டத்தில் 4 : 0 என்று பி.எஸ்.ஜி அணி வெற்றி பெற்றிருந்தது. இதனால் பார்சிலோனா அரையிறுதி ஆட்டத்திற்குத் தகுதி பெற வேண்டுமானால் ஸ்பெனினில் நடைபெறும் இரண்டாவது காலிறுதி ஆட்டத்தில் 6 கோல்கள் அடித்தாலே சாத்தியம் என்ற நிலை நிலவியது. இரண்டு அணிகளும் சமபலம் பொருந்தியவையாக இருந்த காரணத்தால் பார்சிலோனா அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறாது என்ற எண்ணமே ரசிகர்கள் அனைவரிடமும் இருந்தது. ஆனாலும் இந்தப்போட்டியில் 6 : 1 என்ற கோல் கணக்கில் பார்சிலோனா பெற்ற வெற்றியை இன்னமும் ரசிகர்களால் நம்பமுடியாமலே இருக்கிறது.

# காலம்கடந்த ஞானம்

1995 ஆம் ஆண்டு இலங்கை - அவுஸ்ரேலிய அணிகள் மெல்பேர்னில் விளையாடிய டெஸ்ட் போட்டியின் போது அவுஸ்ரேலிய நடுவர்களான டரெல் ஹெயாரும் றோஸ் எமர்சனும் முரளிதரன் பந்தை எறிவதாகக் கூறிய குற்றச்சாட்டுக் குறித்து அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் தலைவர் ஸ் ஸ்ரீவ்வோ கடந்தவாரம் ஒரு கருத்தை வெளியிட்டுள்ளார். முரளிதரனின் பந்துவீச்சுப் பாணி சட்டவிதிகளை மீறியது என்ற பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்து அவரை அவமானப்படுத்தப்பார்த்தனர் என்பதே அதுவாகும்.

ஆனாலும் அவருக்கு முன்னதாகவே இலங்கை அணி 1995 மற்றும் 1998 ஆம் ஆண்டுகளில் அவுஸ்ரேலியாவுக் குச் சுற்றுப்பயணம் மேற் கொண்டபோது அவுஸ்ரேலி யாவில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று முரளியின் பந்து வீச்சுக் குறித்து சேர். டொனால்ட் பிரட்மனிடம் கருத்துக் கேட்டுள்ளது. இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் முரளிதரன் கிரிக்கெட் விதிகளுக்கு முரணாக பந்துவீசுகி றார் எனக்கூறுவதை நான் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டேன் எனவும் அவரது பந்துவீச்சில் எந்தவித தவறும் கிடையாது எனவும் சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இவ்வாறான பாணியில் பந்துவீசும் வீரர்களைக் காண்பது அரிது எனவும் அவர் கூறியிருந்தார்.

ஆனாலும் சம்பந்தப்பட்ட பத்திரிகை பிரட்மனிடம் எதிர்மறையான கருத்தை எதிர்பார்த்ததனாலோ என்னவோ இந்தக்கருத்தை உடனடியாகப் பிரசுரிக்காமல் 2004 ஆம் ஆண்டு டிசம்பரிலேயே பிரசுரித்திருந்தது. முரளி விடயத்தில் உண்மை அவுஸ்ரேலிய வீரர்களுக்குத் தெரிந்திருந்தாலும் அதனை வெளிப்படுத்

துவதில் பூனைக்கு யார் மணி கட்டுவது என்ற நிலையே சில வீரர்களிடம் நிலவியது. அத்தகைய ஒருவராகவே ஸ்ரீவ் வோவும் விளங்கி உள்ளார் என்பதை தற்போது உணர முடிந்தாலும் பிரட்மனின் கருத்து வெளிவந்த பின்னராவது காலம்கடத்தாமல் தனது கருத்தை ஸ்ரீவ் வோ கூறியிருக்கலாம்.

ஆனாலும் அன்றைய காலப்பகுதியில் டெஸ்ட் போட்டிகளில் ஷேன் வோர்னுக்குப் போட்டியாளராக முரளிதரனே விளங்கியதனால் ஸ்ரீவ் வோ தொடர்ந்து மௌனம் காத்திருக்க லாம். எது எப்படியோ 22 வருடங்கள்



கழித்து தற்போதாவது ஸ்ரீவ் வோ ஒத்துக்கொண்டமைக்காக அவரைப் பாராட்டலாம்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறிண்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 06.01.2018 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - நிருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.